Vijey விஜய
# விஜய்
23.03.2011 - மலர் 08, இதழ் 03



## நாணயத்தாளின் வரலாறு

## சிற்றரசுகளாக சிதறிக்கிடந்த ஜேர்மனி

## ஜப்பான் பூமியதிர்ச்சி

விலை ரூபா 15/-



சாரணர் இயக்கத்தின் ஆரம்பம்



காசநோய் தினம் அனுஷ்டிப்பு



கெசினி விண்கலத்தின் ஆயுள் நீடிப்பு

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிளர்ச்சிக்கு மன்னனின் ஆதரவு

கிளர்ச்சியின் காரணமாக, மக்கள் மத்தியில் கடுமையானதொரு அமைதியற்ற சூழ்நிலை ஏற்பட்டது. மன்னனின் திசாவைமார் கிளர்ச்சியைத் தூண்டி உக்கிரமாக்கினர். பயிர்ச்செய்கையாளர்களும், துயரில் வாடுவோரும் கறுவா உரிப்பவர்களுக்கு மென்மேலும் தமது ஆதரவை வழங்கினர். அதனால், கிளர்ச்சி மேலும் வளர்ச்சி அடைந்து கடுமையாகியது. எனினும், ஒல்லாந்தர் பின்வாங்கவில்லை. கடும் பிரயத்தனம் செய்து கிளர்ச்சியை அடக்கினர். கிளர்ச்சியுடன் தொடர்புபட்டவர்களை குறிப்பாக கிளர்ச்சித் தலைவர்களைக் கைது செய்து அவர்களை நாடுகடத்தினர்.

அரச படையினர் இது குறித்து கோபமடைந்தனர். அதற்கெதிராக கிளர்ந்தெழுந்தனர். எழுச்சி பெற்றனர். சமூகமாக ஒன்றிணைந்தனர். ஹங்வெல்ல திசையை நோக்கிச் சென்றனர். ஒல்லாந்தருக்குச் சொந்தமான முகாம்களின் வெளியே இருந்த காவலரண்களைக் கைப்பற்றினர். அங்கிருந்த படையினரைக் கொன்றனர்.

அத்துடன், மாத்தறை திசாவையினரும் மாத்தறைக் கோட்டையை கைப்பற்றினர். இதனால், கிளர்ச்சி மேலும் உக்கிரமடைந்தது. காலியில் இருந்த ஒல்லாந்தருக்குச் சொந்தமான கட்டடங்கள் பாடசாலைகள் மற்றும் வாடிவீடு அனைத்தையும் கிளர்ச்சியாளர்கள் நிர்மூலமாக்கினர். இதனால், ஒல்லாந்தர் பெரிதும் மூர்க்கமடைந்தனர். இராணுவ பலத்தைப் பிரயோகித்து மன்னனுக்குச் சொந்தமான பிரதேசங்களை சுற்றி வளைத்தனர். ஆனாலும், அப்பகுதிகளில் அதிக நாட்கள் அவர்களால் நிலைகொள்ள முடியவில்லை. மீண்டும் தமது இடங்களுக்குச் செல்லும் நிலையே ஏற்பட்டது.

இதற்கிடையில் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனின் நாயக்க வம்ச ஆலோசகர்கள் ஒன்று திரண்டனர். வேறு வெளி நாட்டவர்களின் அனுசரணையை பெறத் தீர்மானித்தனர். அதற்கமைய, மதுரை நகரில் இருக்கும் ('நாவொட்') நவாபின் உதவியை நாடினர். எனினும் அது பின்னர் நிராகரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சா/தரப் பரீட்சை பெறுபேறுகள்:

# பரீட்சைக்குத் தோற்றியோரில் 62% ஆனோர் சித்தி

## 3,059 மாணவர்கள் 9 பாடங்களிலும் 'ஏ' சித்தி

கடந்த வாரம் வெளியிடப்பட்ட 2010, க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய, பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 62 சதவீதமானோர் சித்தியடைந்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

3,059 மாணவர்கள் 9 பாடங்களிலும் 'ஏ' தரச் சித்தியைப் பெற்றுள்ளனர். அத்துடன், அதி விசேட சித்தியைப் பெற்றுள்ள முதல் 25 பேரில், அதிகமானோர் கிராமப்புறங்களைச் சேர்ந்த மாணவர்களாவர் என்றும் அறியக்கிடைக்கின்றது.

கடந்த டிசம்பர் மாதம் இடம்பெற்ற இப்பரீட்சைக்கு நாடளாவிய ரீதியிலிருந்து 5,24,000 மாணவர்கள் தோற்றியிருந்தனர். அவர்களில் 1,95,112 பேர் உயர்தரம் கற்கக்கூடிய வாய்ப்பினைப் பெற்றுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார். அதேவேளை; 14,961 பேர் சகல பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஆங்கிலம், தகவல் தொழில்நுட்ப டிப்ளோமாதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்கள்



இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற ஆங்கில டிப்ளோமா கற்கைநெறி மற்றும் தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறியில் சித்தியடைந்தவர்களுக்கு அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரிய நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுப்பதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பீ.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சுடன் கலந்துரையாடி, குறித்த கற்கைநெறிகளை நவீனமயப்படுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அரசாங்க பாடசாலைகளில் ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப பாடங்களுக்கு நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்குத் தீர்வு காணும் வகையிலேயே இந்த டிப்ளோமா பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்களை வழங்கத் தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை விண்ணப்பங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பிவைப்பு



இந்த வருடத்தின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. பத்து வயதிற்கும் பதினொரு வயதிற்கும் இடைப்பட்ட மாணவர்கள் (சுற்று நிருபத்திற்கு அமைவாக) இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.


அத்துடன், பரீட்சைக்கு விண்ணப்பிக்கின்ற மாணவர்களின் பெற்றோர்களது வருமானத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டு, பெற்றோரின் முன்னிலையில் விண்ணப்பப் படிவங்கள் நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் ஏதேனும் சிக்கல்கள் நேரின் அதற்கான பொறுப்பினை குறித்த பாடசாலை அதிபர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். இப்பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் 14 ஆம் திகதி நடைபெறும் என்றும் தெரியவருகிறது.

# இலங்கையில் வருடமொன்றிற்கு 11,000 காசநோயாளிகள்

இலங்கையில் வருடமொன்றிற்கு சுமார் 11,000 காசநோயாளிகள் இனங்காணப்படுவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

காசநோயால் பாதிக்கப்பட்டுள்ள அதிகமான நோயாளிகள் கொழும்பிலிருந்தே இனங்காணப்பட்டுள்ளனர். இந்நோய்த் தாக்கத்துக்கு ஆளானவர்கள் அதற்கான




மருத்துவ சிகிச்சையை உரிய முறையில் பெறத் தவறுவதே இந்நோய் பரவுவதற்கான பிரதான காரணமாக இருப்பதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

காசநோயாளிகளை மருத்துவப் பரிசோதனைக்குட்படுத்தல் மற்றும் உரிய சிகிச்சையைப் பெற்றுக்கொடுத்தல் போன்றவற்றுக்காக அரசாங்க மருத்துவமனைகளில் விசேட வேலைத்திட்டம் அமுலில் இருப்பதாகவும், இதுதவிர; பிரதான தனியார் மருத்துவமனைகளில் காசநோய் சிகிச்சைப் பிரிவொன்றை ஆரம்பிப்பதற்குத் தேவையான உதவிகளை வழங்க சுகாதார அமைச்சு தீர்மானித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க பலவருட காலமாக சிங்கள மொழியில் 5-ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் அதி உயர் புள்ளிகளைப் பெற்றுத்தந்த "சதர" நிறுவனத்தின் முன்னோடிப் பரீட்சை வினாத்தாள்களின் தமிழ் மொழிபெயர்ப்பான சதர புலமைப்பரிசில் வெற்றி வழி காட்டி

இதோ வெளிவந்து விட்டது

5 புலமைப்பரிசில்
சதர புலமைப்பரிசில் வெற்றி வழி




பகுதி I, II உத்தேச வினாப்பத்திரங்க - ள் 15 விடைகளுடன் உள்ளடக்கிய "சதர புலமைப்பரிசில் வெற்றிவழி காட்டி" வெளிவந்துள்ளது

வாங்குங்கள் - வாசியுங்கள் சதர
அறியுங்கள் - வெற்றி பெறுங்கள்

122, Awissawella Road, Maharagama.
Tel - 011 2850981, 7394141, Fax - 2846256

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# காச நோய் பற்றி அறிந்திருப்பது அவசியம்

மனிதனுக்கு ஏற்படும் பல்வேறு நோய்களில் சுவாச நோயான காசநோயும் ஒன்றாகும். இது முற்று முழுதாக பக்டீரியாவாலேயே ஏற்படுகிறது.

அதிலும் குறிப்பாக மனித உடலின் எந்தப்பகுதியையும் தாக்கக்கூடிய 'மைக்கோ பக்டீரியம் டியுபர் குளோசிஸ்' என்கிற பக்டீரியாவினால் தான் இது ஏற்படுகிறது. பொதுவாக, சிறுவயதிலிருந்து ஊட்டச்சத்து நிறைந்த உணவு வகைகளை அளவோடு உண்டு வந்தால் இந்நோயை தவிர்க்கலாம் என்கின்றனர் வைத்தியர்கள். இருந்தாலும் இந்நோய் அநேகருக்கு வந்து விடுகிறது. இதனை எப்படிக் கண்டறிவது என்பது பற்றிய அறிவு பலருக்கு இருந்தும் இன்றைய சூழலில் இந்நோய் வருவதை தடுக்க முடியாமலேயே இருக்கின்றது.



ஏனெனில், சுற்றுப்புறச் சூழல் அசுத்தமானதாகக் காணப்படுவதே, இந் நோய் ஏற்படுவதற்கான முக்கியமான காரணியாகும். 'ஏழைகளின் நோய்' என இது கூறப்பட்டாலும் ஏனையவர்களுக்கும் இந்நோய் வந்துவிடுகிறது.

**நோயின் அறிகுறிகள்:** திடீரென்று உடல் மெலிந்து போதல், விட்டுவிட்டுக் காய்ச்சல் தொடர்தல், அதிகரித்த இருமல், சளி வருதல் போன்ற அறிகுறிகள் ஏற்பட்டவுடன் உடனடியாகவே வைத்தியரை நாடுதல் அவசியமாகும். இவை இந்நோய் வருவதற்கான அறிகுறியாக இருக்கலாம்.

**முக்கியமான மருந்துகள்:** புரதச்சத்து நிறைந்த உணவுவகைகளை நன்கு சேர்த்து நாளாந்த உணவில் உண்டு வரவேண்டும். நோய் தாக்கம் உள்ளது என உறுதிப்படுத்தப் பட்டால் சாறு நிறைந்த அப்பிள், திராட்சை, பேரிக்காய், அன்னாசி, எலுமிச்சை, தோடம் ஆகிய பழங்களைப் பிழிந்து அல்லது சுளைகளாக ஒருநாளைக்கு மூன்று வேளை உண்ண வேண்டும்.

அத்துடன், காய்ச்சிய பாலையும் மூவேளை அருந்த வேண்டும். மூன்று மாதங்களுக்கு பழங்கள், அவித்த காய்கறிகள், பால், முதலியவற்றை முக்கிய உணவாக உண்டுவந்தால் காசநோய் சென்ற இடம் தெரியாமல் மறைந்துவிடும். உடலும் மொழு மொழு என்று காணப்படும்.

பாலில் சுண்ணாம்புச் சத்து உள்ளது. காசநோயைக் குணமாக்க இது தேவையாகும். இது பாலில் வேண்டிய மட்டும் உள்ளது என்பதால் அதனை அருந்தலாம். நோய் உள்ளவர்கள் தினமும் குறைந்தது ஒரு லீற்றர் பாலை அருந்துவது நல்லதாகும்.

அத்துடன், நெல்லிக்காய் சாறும் காசநோய்க்கு முக்கியத்துவ மிக்கதாக காணப்படுகிறது. ஏனெனில், நெல்லியில் விட்டமின் சி உண்டு. காசநோயை உண்டாக்கும் பக்டீரியாவை அழிக்கும் தன்மை இதற்குண்டு. அதனால், ஒரு தேக்கரண்டி சாறுடன் அதேயளவு தேனும் சேர்த்து தவறாமல் காலையில் அருந்தி வந்தால் காசநோய் கட்டுப்பாட்டில் வரும்.


ஆயுர்வேதத்தில் சீத்தாப்பழம் ஒரு அரிய மருந்தாகக் கூறப்படுகிறது. இது காசநோயை குணமாக்கி உடலுக்கு புத்தெழுச்சியை தோற்றுவித்து உடற்பலத்தை தருகிறது. இந்நோய் கண்டவர்கள் எக்காரணம் கொண்டும் தேநீர், கோப்பி, ஊறுகாய்ச் சாறு போன்றவற்றை அருந்தக்கூடாது. அவ்வாறு அருந்தும் பட்சத்தில் நோய் குணமாவது தடைப்பட்டு சுகமாக நீண்டநாள் எடுக்கும். நோய் குணமாகும் வரையில் உடலையும், உள்ளத்தையும் ஒருநிலைப்படுத்தி கவலைகளிலிருந்து விடுபட்டிருத்தல் வேண்டும்.

தினமும் உடற்பயிற்சியுடன், நடைப்பயிற்சி செய்வது நோய் கண்டவருக்கு நல்ல பலனைத் தரும். அத்துடன், வைத்தியரை நாடித் தினமும் தவறாது மருந்து மாத்திரைகள் பெற்று பாவித்து வந்தால் விரைந்து காச நோயில் இருந்து விடுதலை பெறலாம். சோறு, இட்லி போன்றவற்றை அளவுடன் சாப்பிடுவது நன்று. அசைவ உணவு உண்பவர்கள் குழந்தைகளுக்கு மீனுடன் முட்டையும் சேர்த்து கொடுப்பதுடன் பழங்களுடன் பசுப்பாலையும் தினமும் கொடுத்து வரவேண்டும்.

இன்று அனைத்து வைத்தியசாலைகளிலும் இதற்கான சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையில் காசநோய் முற்றாகத் தடுக்கப்பட்டு வந்தாலும் சுற்றாடல் அழுக்கு காரணமாக, காசநோய் வந்தே தீருகிறது. இதிலிருந்து பாதுகாப்பாக வாழ்வதற்கான இருப்பை ஏற்படுத்துவதுடன், நாம் வாழும் சுற்றாடலை சுத்தமாக வைத்திருப்பது அனைவருக்கும் சுகாதாரமாக அமையும்.

**எஸ்.எல்.மன்சூர்**

# சுவைமிகு சவ்வரிசி உணவு



சவ்வரிசி (Sago) எனும்போது அது ஒரு அரிசியினம் என்றே நம்மில் பலர் கருதுகின்றனர். ஆனால், இது ஒருவகைப் புல்லின மரத்தண்டிலிருந்து பெறப்பட்டு தயாரிக்கப்படும் உணவுப் பதார்த்தமாகும். வெள்ளை நிறத்தில் மணிமணியாகக் காணப்படும் சவ்வரிசியில் முற்றுமுழுதாக 'காபோவைதரேட்'' காணப்படுகின்றது.

சவ்வரிசியோடு சீனி, வாசனைத் திரவியம், முட்டை, பயறு, தேங்காய்ப்பால் என்பன சேர்க்கப்பட்டு கஞ்சி தயாரிக்கப்படுகின்றது. சவ்வரிசிகொண்டு கேக்வகைகள், இனிப்புப் பதார்த்தங்கள் தயாரிக்கவும் முடிகின்றது. சவ்வரிசியை நீர்விட்டு சூடாக்கினால் ஒருவகை பசைச் சாற்றைப் (Starch) பெறலாம். கழுவி சுத்தம் செய்யப்பட்ட பருத்தித் துணிகளுக்கு இதனை இட்டு, துணியைக் கடினமாக்கப் பாவிப்பர். புதிய பருத்தித் துணிகள் தயாரிக்கப்பட்டதும் இப்பசைச் சாற்றிலிட்டு காயவைத்து மடித்துப் பொதி செய்யப்படுவதும் உண்டு. சாரங்கள் இவ்வாறாகப் பொதி செய்யப்படுகின்றன.

மெட்ரோக்ஸைலன், எம்சாரு போன்ற புல்லின மரங்களிலிருந்தும், கிழக்கிந்தியப் பகுதிகளில் வளரும் பாம் (Palm) இன மரங்களிலிருந்து பெறப்படும் மச்சப்பகுதியிலிருந்து







கிடைக்கும் மரச்சோறு அல்லது மாப்பொருளிலிருந்தே சவ்வரிசி தயாரிக்கப்படுகின்றது. இவ்வகை மரங்கள் அதிகமாக இந்தோனேஷியா, மலேசிய ஆகிய பகுதிகளில் பயிரிடப்படுகின்றன. தாழ்வான சதுப்பு நிலப்பகுதியில் வளரும் இவ்வகைப் புல்லின மரங்கள் 30 அடி உயரம் வளரக்கூடியதாகும்.

இம்மரங்களில் உயர்ந்து வளரும் பருமனான தண்டிலிருந்து பெறப்படும் மச்சப்பகுதியே சவ்வரிசிக்கு மூலப்பொருளாகும். வளர்ந்து வரும் மரத்தில் கனிகள் உருவாகின்றபோது, அவை மச்சப்பகுதியை உறிஞ்சி மரத்தை உள்ளீடற்றதாக்கி விடுவதால், சவ்வரிசிக்காக வளர்க்கப்படும் மரங்கள் குலைக்கதிர் தோன்றியதும் வெட்டப்பட்டு, தண்டிலுள்ள மரச்சோறு நிறைந்த மச்சப் (pith) பகுதி பிரித்தெடுக்கப்படுகின்றது.

சவ்வரிசியினால் செய்யப்படும் உணவுப் பதார்த்தங்கள் உடலுக்குக் குளிர்ச்சியைத் தரவல்லவை. அதனால், சவ்வரிசி கொண்டு தயாரிக்கப்படும் உணவுப் பதார்த்தங்களை குறிப்பாக ஆசிய நாட்டு மக்கள் விரும்பி உண்கின்றனர்.


**ஐ.ஏ.சத்தார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியில் கவனத்தின் செல்வாக்கு



**எண்ணங்களை ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்தி, அவற்றை நினைவில் வைத்துக்கொள்ள முயல்வது மனிதன் தொன்று தொட்டு கடைப்பிடித்து வரும் ஒரு சாதாரண பழக்கம்தான். எனினும், எதையும் எதனுடனும் தொடர்பு படுத்தி நினைவில் வைத்துக்கொள்ளும்போது அங்கு 'கவனம் செலுத்துதல்' என்பது அவசியமாகின்றது.**







நாம் கற்கின்ற விடயமானது, நமது மனதில் முதலில் சென்று பதியும்போது, அது எவ்வளவு அழுத்த வேகத்தோடு பதிகின்றதோ, அந்த அழுத்தமான பதிவானது நாம் குறித்த விடயத்தின் மீது செலுத்தும் கவனத்தின் அழுத்த அளவைப் பொறுத்தே இருக்கிறது.

எந்தவொரு விடயத்திலும் ஆழ்ந்த ஈடுபாடும் முழுக் கவனமும் செலுத்துகின்றவர்கள் எந்நேரமும் நல்ல நினைவாற்றலோடு விளங்குகின்றனர். அத்துடன், கவனம் செலுத்தும் சக்தியின் வெவ்வேறான அழுத்த அளவுகளே, மனிதர்களில் அறிவாற்றலின் அளவை நிர்ணயிக்கின்றது.

## கவனத்தின் அவசியம்

நமது ஞாபகசக்தி அதிகரிக்கவும் வலுப்பெறவும் வேண்டும் என நாம் விரும்பினால், எமது கவனம் ஒருமுகமாகவும் அழுத்தமானதாகவும் இருக்க வேண்டும்.

அத்துடன், ஒரு பொருள் பற்றிய கருத்து, புலன் வழியாக நம் மனதிற்குச் செல்கின்றது என்பது மட்டும் போதாது. மாறாக, அந்தக் கருத்தை மீண்டும் நினைவில் எழுப்புவதற்கு அதன் மேல் செலுத்தும் நம் கவன அழுத்தமும் அது நம் மனதில் எழுப்பும் உணர்வின் அழுத்தமும் முதன்மையானவையாகும். எனவே, நினைவாற்றல் குறைவு, மறதி ஏற்படுவதற்குக் காரணம்; கவனக் குறைவேயாகும். தீவிர கவனமே நல்ல நினைவுக்கு முதல் தேவை.

சிறிது சிறிதாக ஒன்றைக் கற்று, அதைத் திரும்பத் திரும்ப நினைவு படுத்திக்கொள்ளும்போது, நாம் கற்கும் குறித்த விடயம் வாழ்க்கை முழுவதும் பயன்படும் வகையில் நிலைத்து விடுகிறது. ஒரு பொருள் அல்லது கருத்தின் மீது ஆழ்ந்த கவனம் செலுத்தும் மனமானது, அந்த நேரத்தில் ஏனையவற்றை தன் கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் அடியோடு ஒதுக்கி விடுகிறது.

ஒரே சமயத்தில் - ஒரே கருத்தில் ஆழ்ந்து கவனம் செலுத்தக்கூடிய மன வலிமையைப் பெறுவதே மிகச் சிறப்பானது. இவ்வாறு கவனம் செலுத்தக்கூடியவர்கள் எதையும் எளிதில் மறக்க மாட்டார்கள். பிளவுபடாத ஒருமித்த கவனிப்பு தெளிவான மனப் பதிவுகளுக்கு மிகவும் உதவியாகின்றது. எதைப் பற்றியும் முழுமையான அறிவைப் பெற வேண்டுமானால், அதன்மீது நம்முடைய ஒருமுகமான ஆழ்ந்த கவனத்தை முழுமையாகச் செலுத்த வேண்டும். அப்போதுதான் எதையும் பூரணமாகக் கற்ற திருப்தி ஏற்படும்.

(தொடரும்)

**கல்வி**

**முகாமைத்துவம் - 47**

**கற்றலுக்கான ஆலோசனைகள்**

# கடலுக்குள் நகரமைக்கும் மொனாக்கோ

மொனாக்கோ, உலகில் நிலப் பரப்பால் மிகச் சிறிய நாடுகளின் வரிசையில் இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான மொனாக்கோவின் சனத்தொகை சுமார் 32 ஆயிரம். ஆனாலும், பல்வேறு காரணங்களின் நிமித்தம் பல ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த மக்கள் அந்நாட்டில் குடியேறத் தொடங்கியுள்ளனர். இதனால், எதிர்காலத்தில் மக்கள் குடியேற்றத்துக்கான நிலப்பரப்புத் தேவை அங்கு ஏற்படலாம் என்று கூறப்படுகின்றது. எனினும், அதற்கு எங்கே போவது?

மொனாக்கோ நாட்டின் பொருளாதாரம் கடலை நம்பித்தான் இருக்கிறது. பெரும்பாலான மக்கள் கடற்றொழிலிலேயே



ஈடுபட்டுள்ளனர். எனவே, பொருளாதார ரீதியில் கைகொடுக்கும் கடலை நம்பி இன்னொரு திட்டத்தை முன்னெடுக்கவுள்ளது மொனாக்கோ அரசாங்கம். அதுதான், கடலுக்குள் நகரமொன்றை உருவாக்கும் திட்டம். இந்த நகரம் ஐந்து கால்பந்தாட்ட மைதானங்கள் அளவில் இருக்குமாம்!

கடலுக்கடியில் நிலத்தை இரண்டாகப் பிளந்து, சுரங்கம் அமைத்து இந்நகரை உருவாக்கத் திட்டமிட்டுள்ளனர். இத்திட்டம் எதிர்காலத்தில் அங்கு மக்கள் குடியேறுவது தொடர்பில் எதிர்கொள்ளப்படவுள்ள நிலநெருக்கடிக்கு பெரும்பாலும் தீர்வாக அமையும் எனக் கருதப்படுகிறது. ஆடம்பர பங்களா, அரச அலுவலகம், சிறு தொழிற்சாலை உட்பட, பல்வேறு கட்டடங்கள் இந்நகரில் நிர்மாணிக்கப்படவுள்ளன. 2015 ஆம் ஆண்டளவில் இத்திட்டத்தை ஆரம்பித்து 2020 ஆம் ஆண்டுக்குள் அதனை நிறைவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எம்.ஏ.எஃப். சப்ரானா


# ஜாலியா வீட்டிலிருந்து Easy யா English படிங்க.

பாடசாலை மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளது. தமிழ் மொழி மூல விளக்கம் உண்டு. ஆண்டு 8 மேற்பட்ட மாணவர்கள் கற்க முடியும்.

## வீட்டிலிருந்து ஆங்கிலம் கற்பது எப்படி..... ?

1) 7 ஆங்கில பேச்சு பயிற்சி இலக்கண புத்தகங்கள்.
2) ஆங்கில பேச்சு பயிற்சி வாசிப்பு Cd-1
3) Cd-வழி காட்டி புத்தகம் ஒன்று.
4) The Necklace வாசிப்பு புத்தகம் ஒன்று

ஒவ்வொரு பாடப் புத்தகத்திலும்
- ஆங்கில இலக்கணம்,
- ஆங்கில பேச்சுப் பயிற்சி,
- கடிதங்கள் எழுதும் முறைகள்,
- கட்டுரைகள்
- குறுக்கெழுத்து போட்டிகள்,
- சிறுகதைகள்

கொண்டதாக அமையும் புத்தகங்களில் காணப்படும் பயிற்சிகளுக்கு விடை எழுதி அனுப்ப வேண்டும்.

பயிற்சிகள் பிழை திருத்தப்பட்டு மீண்டும் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

இதன் மூலம் பாடநெறியை சிறப்பாக பூர்த்தி செய்ய தினசரி 45 நிமிடங்கள் கற்றல் வேண்டும்.

## சான்றிதழ் பற்றிய விபரம்.

பாடநெறியை வெற்றி கரமாக பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு

**45 நாட்களின் முடிவில்**

**Diploma In English**

தகுதி சான்றிதழ் வழங்கப்படும். எமது நிருவனத்தினால் வழங்கப்படும் சான்றிதழானது தொழில் வாய்ப்புகளை பெற உதவும்.

## யாருக்காக?

தபால் மூல ஆங்கில பாடநெறியை ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவரும் கற்க முடியும்.

- ☆ ஆங்கிலத்தில் பின் தங்கிய 8 ம் ஆண்டுக்கு மேல் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்கள் (கட்டாயமாக பெற்றோரின் வழிகாட்டல் அவசியம்)
- ☆ தொழில் புரிவர்கள்.
- ☆ இல்லத்தரசிகள்.



## Study Pack ஐ எவ்வாறு பெறுவது ?

English Home study pack ஐ நீங்கள் பெற விரும்பின் பின்வருமாறு உங்கள் விபரங்களை SMS செய்யவும். VS , இடைவெளி

பெயர், முகவரி ,வயது , தொலைபேசி என

SMS -செய்யுங்கள்-

**0777-806 606**

பின்னர் உங்களுடைய Study pack அருகே இருக்கும் தபால் கந்தோருக்கு அனுப்பி வைக்கப்படும் பின்னர் நீங்கள் ரு 1250/- செலுத்தி தபால் கந்தோரில் Study pack ஐ பெற்றுக் கொள்ள முடியும். அல்லது.

Commercial Bank- 80-400-52-644
Sampath Bank - 1007-5019-9539
Boc -9956240

வங்கி ஒன்றில் Mr- Ramzan என்ற பெயரில் ரு 1000/- மட்டும் செலுத்தி விட்டு 0814-92 91 93 என்ற இலக்கத்திற்கு அறிவிக்கவும்.

Study pack வீட்டுக்கே அனுப்பி வைக்கப்படும்.

**JEI INSTITUTE**

P.O.BOX.119 KANDY.
TELE.0814-92 91 93,0777-806 606


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20 ஆம் நூற்றாண்டை கதிகலங்க வைத்த இரண்டு உலகப் போர்களும் உலக வரலாற்றில் கறைபடிந்த அத்தியாயங்களாகும். இவ்விரு உலக யுத்தங்களுக்கும் பல்வேறு காரணங்கள் இருந்த பொழுதிலும் ஜேர்மனியே மிகப் பிரதானமான காரணங்களுக்குரிய நாடாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. இரு உலக யுத்த ஆரம்ப நிலையில் ஐரோப்பாவின் வல்லரசாக உச்சநிலையில் இருந்த நாடுகளில் ஜேர்மனி மிக முக்கியமானது. ஆனால், முதலாம் உலக யுத்தம் ஆரம்பிப்பதற்கு சுமார் 50 வருடங்களுக்கு முன்பு ஐரோப்பாவின் வரைபடத்தில் ஜேர்மனி என்ற பெயரில் ஒரு நாடே இருக்கவில்லை என்பது ஆச்சரியமானதாக இருந்தாலும் உண்மை அதுதான்

# சிற்றரசுகளாக சிதறிக்கிடந்த




க.பொ.த.(சா/த) வரலாறு பாடத்தை அடியொட்டி வழங்கப்படுகின்றது




## சிற்றரசுகளாக சிதறிய நிலையில்

19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இன்றைய ஜேர்மனி இருக்கும் பிரதேசத்தில் ஜேர்மன் மொழியைப் பேசிய பல்வேறு சிற்றரசுகளைக் கொண்ட 369 அரசுப் பிரிவுகள் இருந்தன. ஆனால், தேசியவாதம் எழுச்சி பெறத் தொடங்கியதும்.ஒரு மொழி பேசிய மக்களிடையே சுய அடையாளம், ஐக்கியம், சுதந்திரம் மற்றும் தேசியவாத எண்ணங்கள் கிளர்ந்தெழுந்தன.

## நெப்போலியன் பொனபாட்

பிரான்சியத் தலைவன் நெப்போலியன் பொனபாட் 1806 இல் ஜேர்மன் பிரதேசங்கள் மீது ஆக்கிரமிப்புச்செய்து ஆஸ்திரியாவையும் அதனை அண்டிய பிரசியாவையும் கைப்பற்றிக்கொண்டார். அதன்பின் 369 ஆக இருந்த அரசுகளின் எண்ணிக்கை குறைவடைந்தது. 1806 இல் உரோமை தலைநகரமாக கொண்டு இயங்கிய புனித உரோமப் பேரரசை ஒழித்துக்கட்டிய நெப்போலியன் பவேரியா, சக்சனி, ஹெசே போன்ற பிரதேசங்களையும் மற்றும் 12 சிறு அரசுகளையும் இணைத்து ரைன் சமஷ்டி அரசை உருவாக்கினார். அதன்பின் இப்பிரதேசங்களில் பல சீர்திருத்தங்களைச் செய்தார். பழைய வலுவிழந்த சட்டத்தொகுப்புக்குப் பதிலாக நெப்போலியனின் புதிய சட்டத் தொகுப்பு அமுலுக்கு வந்தது! நியாயமான வரிமுறை அறிமுகம் செய்யப்பட்டது. இச்சீர்திருத்தங்கள் ஜேர்மனியப் பிரதேசங்களில் தேசிய உணர்வுகளைக் கிளர்ந்தெழச் செய்தன.

## பிரசியாவின் எழுச்சி

369 ஜேர்மன் மொழி பேசும் சிற்றரசுகளில் பிரசியா மிக முக்கியமானதாகும். சனத்தொகையிலும் பரப்பளவிலும் சற்றுப் பெரியதான பிரசியா, ஜேர்மன் மொழிபேசும் பிராந்தியத்தில் தன்னை ஒரு வலிமை பொருந்திய நாடாக அமைத்துக்கொண்டது. நெப்போலியனிடம் தோல்வியடைந்த காலம் முதல், அது சகல துறைகளிலும் வளர்பிறையெனத் துரிதமாக வளர்ந்தது.ஆனால், தன்னம்பிக்கையில் பின்தங்கி நின்றது. ஸ்டெயின் (Stein) ஸ்ச்சார்ண்ஹோர்ஸ்ட் (Scharnhorst) ஆகியோரின் சீர்த்திருத்தங்கள் பிரசியாவின் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் பலம்பொருந்திய அத்திவாரமாக அமைந்தன. விடுதலைப்போரின் (War of Liberation) ஊடாக, பிரசியா பெரும் புகழை சுவீகரித்துக்கொண்டது. 1815 ஆம் ஆண்டின் இலாபங்கள், பிரசியாவை தென் ஜேர்மன் நாடுகளுடன் இறுகப் பின்னிப் பிணைத்தன. அதன் பின் தனது தலைமையில் சின்னாபின்னமாக சிதறிக்கிடந்த ஜேர்மன் மொழி பேசுவோரைக் கொண்ட சிற்றரசுகளை ஐக்கியப்படுத்தி ஜேர்மன் பேரரசை உருவாக்க வேண்டும் என்ற எண்ணக் கரு பிரசிய தலைமைகளிடம் உருவாகத் தொடங்கியது. ஜேர்மனியை பாதுகாக்கும் பொறுப்பை பிரசியா கையேற்றது. மேலும் ஸொல்வெறைன் (Zollverein) மூலம் வியாபார ஐக்கியம் ஏற்படுத்தப்பட்டமையால் ஆஸ்திரியாவுக்கு பதிலாக ஜேர்மன் நாடுகள் பிரசியாவைத் தலைமை நாடாகக் கொண்டன. சுருங்கக் கூறின் பிரசியாவின் எதிர்காலம் ஜேர்மனியின் பலத்தோடும் அதேவேளை, ஆஸ்திரியாவின் வாழ்வு ஜேர்மனியின் பலவீனத்தோடும் தொடர்புற்று நிற்கின்றன.

## ஐக்கியத்திற்கான இடையூறுகள்

ஜேர்மன் ஐக்கியத்திற்கு 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவின் வல்லரசாகத் திகழ்ந்த பிரான்சும் ஆஸ்திரியாவுமே பெருந்தடையாக இருந்தன. போதாக்குறைக்கு இவ்விரு நாடுகளும் ஜேர்மன் பிரதேசத்தின் எல்லையின் இருமருங்கிலும் இருந்தன. பிரான்ஸ் இப்பிரதேசத்திற்கு தென்மேல் பகுதியிலும் ஆஸ்திரியா தென்கீழ் பகுதியிலும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்விரு நாடுகளும் ஜேர்மனிக்குச் சொந்தமான பல சிற்றரசுகளை ஆக்கிரமித்து வைத்திருந்ததுடன் வேறு பல சிற்றரசுகளில் தமக்கு ஆதரவான தலைமைகளை வைத்து அவற்றின்மீது செல்வாக்குச் செலுத்தின.

## முதலாம் வில்லியம்

பிரான்சும் ஆஸ்திரியாவும் ஜேர்மனிய பிரதேசங்களை குறடுபோல் வளைத்து இருபுறமும் நசுக்கி வரும் வேளையில் 1858 ஆம் ஆண்டு முதலாம் வில்லியம் என்பவன் பிரசியாவின் அதிபதியாகி 1861 இல் அரசபீடமேறினான். அவனது பிரவேசம் பிரசிய வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை தோற்றுவித்தது. முதலாம் வில்லியம் திடமும் உறுதியும் படைத்தவன். போர் வீரனாகப் பெற்றிருந்த பயிற்சி, திட்டங்களை திறம்பட வகுக்கவும், தீர்மானங்களைச் சாதுரியமாக நிறைவேற்றவும்,அவனுக்கு முடியுமாக இருந்தது. தன் நாட்டின் எதிர்கால இலட்சியத்தில் அவனுக்கு பூரண நம்பிக்கை இருந்தது. சேவையில் சிறந்த தொண்டர்களை தன்னுடன் சேர்த்துக் கொள்வதிலும், அவர்கள்மீது காண்பித்த பரிபூரண நம்பிக்கையிலும், அவனது சிறந்த அரசியல் ஞானம் பிரதிபலித்தது. அவன் பிரசியாவின் அரசனாக முடிசூடிக்கொண்டது பிரசியாவின் தலைமையில் ஜேர்மனி ஐக்கியப்படுவதற்கு கிடைத்த பொன்னான சந்தர்ப்பமே என்றால் அது மிகையாகாது.

## ஒட்டொவொன் பிஸ்மார்க்

ஜேர்மனிய ஐக்கியம் என குறிப்பிடும்பொழுது அதன் கதாநாயகனே பிஸ்மார்க் தான். ஒட்டோவொன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனியின் ஐக்கியம்










பிரான்ஸ்-ஆஸ்திரிய யுத்தம்

பிஸ்மார்க் எனும் முழுப்பெயரைக் கொண்ட அவர் உலக வரலாற்றின் இதய பீடத்தில் தனக்கென ஒரு தனி இடத்தை அமைத்துக்கொண்டார். பிஸ்மார்க் இன்றேல் ஜேர்மனிய பேரரசு என்ற ஒன்று உருவாகி இருக்குமா? என்பது சந்தேகமே. அவருடைய சாதனைகள் கீர்த்தியும் புகழும் வாய்ந்தவை. 19 ஆம் நூற்றாண்டின் நிகரற்ற ஓர் அரசியல் சாணக்கியனாகத் திகழ்ந்தார். சிறந்த இராஜதந்திரமும் மதிநுட்பமும் நிறைந்தவர். அரசியல் சதுரங்கத்தில் காய்களை நகர்த்துவதில் அவருக்கு நிகர் அவரே. பல்வேறு யுக்திகளைக் கையாண்டு பல்வேறு நாடுகளையும் வல்லரசுகளையும் தனது இலட்சியத்திற்காக அடிபணியவைத்தார்.

அறிவுக் கூர்மையும் அயரா உழைப்பும் கொண்ட பிஸ்மார்க் 1847 ஆம் ஆண்டு அரசியலில் பிரவேசித்தார். அப்பொழுது ஐக்கிய பிரசிய நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் பெற்ற அவர், உலக வரலாற்றில் கால்பதித்தார். பிஸ்மார்க் பிரசியா மீது அளவற்ற தேசப்பற்றும் விசுவாசமும் கொண்டவர். 'நாங்கள் பிரசியர்கள், என்றும் பிரசியர்களாகவே இருப்போம்'' என்ற அவரது கர்ஜனையே அதற்கு சான்று பகரும். ஜேர்மனியின் ஐக்கியம் பூர்த்தியானபோது பிரசியாவில் ஜேர்மனி இணைக்கப்பட்டதேயல்லாமல் ஜேர்மனியில் பிரசியா இணைக்கப்படவில்லை என்பதற்கு பிஸ்மார்க்கே மூலகாரணமாகும்.

ஜேர்மன் பிரச்சினைகளைப் பற்றிய ஒரு விசாலமான நோக்கையும், அதில் சூழ்ந்துகிடந்த சிக்கல்களையும் அதை விடுவிக்க எடுக்க வேண்டிய முயற்சிகளைப் பற்றியும் பிஸ்மார்க் உறுதியான ஒரு முடிவை நிர்ணயித்தார். ஆஸ்திரியாவும் பிரான்சும் பிரசியாவின் எதிரிகளாக இருந்தன. எனவே, அவை ஐக்கியத்திற்கு பெரும் முட்டுக்கட்டையாக இருந்தன. எனவே, அவ்விரு நாடுகளுடனான போரின் பின்பே ஜேர்மனியின் ஐக்கியம் கைகூடுமென உறுதியாக நம்பினார்.

## ஆஸ்திரிய-பிரசியப் போர்

பிரசியாவுடன் இணையவேண்டிய பல்வேறு சிற்றரசுகளும் பிராந்தியங்களும் ஆஸ்திரியாவின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தன. எனினும், அக்கால வல்லரசான ஆஸ்திரியாவை இலகுவில் வெற்றிகொள்ளமுடியாது என்பது பிஸ்மார்க்கிற்கு நன்றாகவே தெரியும். எனவே, முதலில் தாராளவாத நாடாளுமன்றத்தைக் கலைத்ததுடன் தாராளவாதிகளை அடக்கி பிரசிய இராணுவத்தை முதலில் பலப்படுத்தினார். அதன்பின் ஆஸ்திரியாவுடனான போர் ஒன்று ஏற்படும் பட்சத்தில் ஆஸ்திரியாவுக்கு ஆதரவாகவும் தமக்கு எதிராகவும் எந்தநாடுகளும் வரக்கூடாது என்பதற்காக ஆஸ்திரியாவை தனிமைப்படுத்தும் நோக்குடன் தனது காய்நகர்த்தலை பிஸ்மார்க் ஆரம்பித்தார்.

முதலில் பிஸ்மார்க் ரஷ்யாவின் நட்பைப் பெற்றுக்கொண்டார். பின்னர் டென்மார்க் மீது ஆக்கிரமிப்பை மேற்கொண்டு அதனைக் கைப்பற்றினார். இங்கிருந்த செல்ஸ்விக் மற்றும் ஒல்சீன் ஆகிய இரு மாகாணங்களைக் கைப்பற்றுவதே பிஸ்மார்க்கின் நோக்கமாக இருந்தது. ஏனெனில், இவ்விரு மாகாணங்களிலும் ஜேர்மனியினர் பெரும்பான்மையாக டேனியர் (டென்மார்க் இனத்தவர்)இருந்தனர். அவரின் நோக்கம் நிறைவேறியது. 1865 இல் பிரான்சுடன் ஒரு இரகசியப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். அதன்மூலம் ஆஸ்திரிய-பிரஷ்ய போரின்போது பிரான்ஸை நடுநிலையில் வைத்துக்கொள்வதற்கு ஒழுங்கு செய்தார். பிரான்ஸை இணங்கவைப்பது இலகுவான காரியமில்லை. ஏனெனில், பிஸ்மார்க்கினதும் பிரஷ்யாவினதும் பரம விரோதியான மூன்றாம் நெப்போலியனே (மாவீரன் நெப்போலியன் பொனபாட் அல்ல) அப்போதைய பிரான்சிய மன்னனாக இருந்தான். 1865 இல் பியரிட்ஸ் (Biarritz) எனுமிடத்தில் சாட்சிகளின்றி பிஸ்மார்க்- 3 ஆம் நெப்போலியன் சந்திப்பு இடம்பெற்றது. எதிர்காலத்தில் நிகழவிருக்கும் ஆஸ்திரிய-பிரஷ்யப் போரில் பிரான்ஸ் நடுநிலை வகிப்பின், றைன் பிரதேசத்தில் ஒரு பகுதியை பிரதியுபகாரமாகத் தாம் தரத் தயாரென ஆசை வார்த்தை கூறி, பிஸ்மார்க் நெப்போலியனை சமாதானப்படுத்தினான். போரில் எப்படியும் பிரஷ்யா தோல்வியடையும் என்றும் தக்க தருணத்தில் தலையிட்டு சமாதானத்தை ஏற்படுத்தி முழு 'றைன்' பிரதேசத்தையும் அதற்கு அப்பால் 'றைன்' நதிவரையும் பிரான்சின் எல்லையை விரிவுபடுத்தலாம் எனவும் பிரான்சிய மன்னன் 3 ஆம் நெப்போலியன் மனப்பால் குடித்தான். அடுத்து பிஸ்மார்க் 1866 ஏப்ரலில் இத்தாலியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டார். ஆஸ்திரியா பிரஷ்யாவுடன் போர் தொடுப்பின் அப்போரில் இத்தாலி பிரஷ்யாவுக்கு இராணுவ உதவிபுரியும், அதற்கு நன்றி உபகாரமாக வெனீசியாவைப் பெற்றுத்தரவும் பிஸ்மார்க் உறுதிமொழிகூறி படையுடன் நட்பைச் சம்பாதித்துக்கொண்டார்.

1866 ஜூன் 16 ஆம் நாள் செல்ஸ்விக்- ஒல்சின் பிரச்சினையை அடிப்படையாக வைத்து பிரசியா போரில் குதித்தது. சக்சனி, எசேகசல், அனோவர் போன்ற பிராந்தியங்கள் 10 நாட்களில் பிரசியாவின் கீழ் வந்தன. அடுத்த சில நாட்களில் வட ஜேர்மனியின் பெரும்பாலான பகுதிகள் பிரசியா வசமாகின. அதன்பின் பொகீமியா, சடோவா (Sodowa) ஆகிய இடங்களில் ஆஸ்திரிய படைகள் முறியடிக்கப்பட்டன. இத்தாலியத் துருப்புக்கள் வெனீசியாவை ஆக்கிரமித்தன.

பின் தென் ஜேர்மனியில் பவேரியா, பேடன், வேட்டம் பேக் ஆகியன இலகுவாக வெற்றிகொள்ளப்பட்டன. மேலும் யுத்தத்தின் விளைவாக செல்ஸ்விக், ஒல்சீன், அனோவர், எசே-நசோ உட்பட 28000 ச.மைல் நிலப்பரப்பை பிரசியா புதிதாகப் பெற்று வட ஜேர்மன் கூட்டாட்சியை நிறுவியது.

இவைதவிர போரின் பயனாக பிரசியா தன் இராச்சியத்தின் இரு பெரும் பகுதிகளுக்கிடையே பரந்து கிடந்த நிலப்பரப்புகளை இணைத்து ஒரு வல்லரசுக்குரிய எல்லைகளைப் பெற்றது. பிசுமார்க்கும் வில்லியமும் பரிபூரணமாக நம்பிக்கை வைத்த இராணுவம் அவர்களை மகிமைப்படுத்தியது. இது அவர்களது எதிரிகளை தலைகுனியச் செய்தது. அதனைத்தொடர்ந்து பிஸ்மார்க் நாட்டின் இலட்சிய வீரனாகப் போற்றப்பட்டான். வெற்றியிலும் எதிரிகள் மனம் மாறும்படி கண்ணியமாக நடந்துகொண்டார்.

## பிரெஞ்சு-பிரசியப் போர்

'ஒருபோதும் ஜேர்மனி ஐக்கியப்படுவதை அனுமதிக்கக் கூடாது' என்பதே பிரெஞ்சு இராஜதந்திரத்தின் உன்னத நோக்கமாக இருந்தது. ஏற்கனவே கைப்பற்றப்பட்ட பவேரியா, பேடன், வேட்டம் பேர்க் ஆகிய பிராந்தியங்களை பிரஷ்யா தக்க வைப்பதில் பிரான்ஸ் முட்டுக்கட்டை போட்டது. அத்துடன், தென் ஜேர்மனியை கைப்பற்ற முடியாமல் பிரான்ஸ் தடை போட்டது. இதனால், ஜேர்மனி ஐக்கியம் அடைய வேண்டுமாயின் கட்டாயமாக பிரான்சுடன் யுத்தம் நடத்தியே தீரவேண்டுமென்ற நிலை தோன்றியது.

1870 இல் 450,000 போர் வீரர்களைக் கொண்ட பிரசிய இராணுவம் திடீர்த் தாக்குதலை மேற்கொண்டு அல்சாஸ் மற்றும் லொஹேயின் பிரதேசங்களை பிரான்சிடமிருந்து கைப்பற்றியது. அதன்பின் பிரான்சுக்கு ஒன்றன்பின் ஒன்றாகத் தோல்விகள் ஏற்பட்டு ஈற்றில் செடான் (Sedan) எனுமிடத்தில் பிரெஞ்சு பேரரசனும் அவனது 83,000 போர்வீரர்களும் பிரெசியாவிடம் சரணடைந்தனர். 1870 செப்டெம்பரில் பிரெஷ்யப் படைகள் பிரான்சின் தலைநகர் பரிஸ் வரை முன்னேறி அதனை முற்றுகையிட்டன. ஒக்டோபரில் மெற்ஸ் எனுமிடத்தில் 180,000 பிரெஞ்ச் வீரர்கள் அடிபணிந்தனர்.

1871 ஜனவரி 18 ஆம் நாள் வேர்செயில்ஸ் நகரத்தின் கண்ணாடி மண்டபத்தில் ஜேர்மன் இளவரசர்களினால் சூழப்பட்ட பிரசிய மன்னன் வில்லியம் ஜேர்மன் சக்கரவர்த்தியாக முடிசூட்டப்பட்டார்.

இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சாஓ டோம் மற்றும் ப்ரின்சிப்

**அரசு:** ஒரு சட்ட சபையைக்கொண்ட பல கட்சிக் குடியரசு.

**சுதந்திரம்:** போர்த்துக்கலிடமிருந்து, 12 ஜூலை 1975.

**தேசிய பெயர்:** சாஓ டோம் மற்றும் ப்ரின்சிப் ஜனநாயகக் குடியரசு (Democratic Republic of Sao Tome & Principe)

**ஜனாதிபதி** (2003): ஃப்ரடிக் டி மெனீஸிஸ்.

**பிரதமர்** (2008):பெட்ரிஸ் ட்ரோவோடா.







## புவியியல்

ஆபிரிக்காவின் மிகச் சிறிய நாடாகிய சாஓ டோம் மற்றும் ப்ரின்சிப், மேற்கு ஆபிரிக்கா பெருநிலப்பகுதியில் இருந்து சுமார் 240 கி. மீற்றர் தூரத்தில் அட்லாண்டிக் சமுத்திரத்தில் அமைந்துள்ள ஒரு தீவுத் தொகுதியாகும். சாஓ டோம் மற்றும் ப்ரின்சிப் ஆகிய இரு தீவுகளும் இத்தீவுத் தொகுதியின் பிரதான பகுதிகளாகத் திகழ்கின்றன. இவை மிகச் சிறிய எரிமலை பாறைப்படிவுகளைக்கொண்ட தீவுகள் ஆகும். மலைகள் நிறைந்த தரைத்தோற்றத்தையும் அடர்ந்த காடுகளையும் கொண்டுள்ளது. காடுகள் தவிர்ந்த பிரதேசங்களில் சிறந்த முறையில் நுகர்வுப் பயிர்ச்செய்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மொத்தப் பரப்பு:** 386 ச.மைல் (1001 ச.கி.மீற்றர்).

**தலைநகரமும் பெரிய நகரமும்:** சாஓ டோம்.

**மக்கள் தொகை** (2010): 175, 808.

**நாணயம்:** டோப்ரா (dobra).

**மொழி:** போர்த்துக்கேயம் (உத்தியோகபூர்வ மொழி).

**இனக்குழுவினர்கள்:** மெஸ்டிக்கோ (சுதேச ஆபிரிக்க மற்றும் ஐரோப்பிய கலப்பினம்), அங்க்லோரஸ், ஃபொரோஸ், சேவிகெய்ஸ், டொன்கஸ், ஐரோப்பியர்.

**பிரதான சமயங்கள்** (2001): ரோமன் கத்தோலிக்கம் 70%, இவேன்ஜிலிக்கல் 3%, எவ்வித மதத்தையும் சாராதோர் 19%.

**எழுத்தறிவு** (2001): 84.9%.

**இணையத்தளக் குறியீடு:** .st

**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** 239.


**தேசிய கீதம்**

Independência total,
Glorioso canto do povo,
Indépendência total,
Hino sagrado de combate...என ஆரம்பமாகின்றது.



தலைநகரின் ஒரு பகுதி


சாஓ டோம் சர்வதேச விமானநிலையம்


பிகோ டி சாஓ டோம் (உயர் மலைச்சிகரம்)

## வரலாறு


தேசிய இலச்சினை

போர்த்துக்கேய நாடுகாண் பயணிகளால் 1471 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட இத்தீவுத் தொகுதி , அதே நூற்றாண்டின் இறுதியில் போர்த்துக்கேயரின் ஆளுகையின்கீழ் வந்தது. 17 ஆம் நூற்றாண்டில் அடிமைத் தொழிலாளர்கள் இத்தீவுகளுக்குக் கொண்டு வரப்பட்டு, பாரிய அளவில் கரும்பு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு சீனி உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால், 19 ஆம் நூற்றாண்டில் கோப்பி மற்றும் கொக்கோ பயிர்ச்செய்கைகள் இங்கு முக்கிய இடத்தை வகித்தன.

இருபதாம் நூற்றாண்டில் விடுதலை இயக்கம் ஆரம்பித்து சுதந்திரத்திற்காக போராடினர். 1974 இல் போர்த்துக்கலில் ஏற்பட்ட புரட்சியின் விளைவாக,போர்த்துக்கல் தனது கடல் கடந்த சாம்ராஜ்யங்களுக்கு சுதந்திரம் கொடுக்க விரும்பி, 1975 ஜூலை 12 இல் இத்தீவுகளுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. இதனை அடுத்து, நாட்டின் ஒரே ஒரு சட்டரீதியான அரசியல் கட்சியான சாஓ டோம் மற்றும் ப்ரின்சிப் விடுதலை இயக்கத்தின் தலைவர் மெனுவேல் பின்டோ டி கொஸ்தா நாட்டின் அதிபராகப் பதவி ஏற்றார்.1990ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பு அறிமுகப் படுத்தப்பட்டு பல கட்சி ஆட்சி முறை தோன்றியது. 2003 ஜூலையில் ராணுவப்புரட்சியின் மூலம் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. எனினு, சர்வதேச அழுத்தங்களால் மீண்டும் ஜனநாயக ஆட்சி மலர்ந்தது.


சாஓ டோமிலுள்ள கிறிஸ்தவ தேவாலயம்


சாஓ டோம் தேசிய நூதனசாலை

## கலாசாரம்

போர்த்துக்கேய மற்றும் ஆபிரிக்க கலப்பு கலாசாரத்தைக்கொண்ட நாடாகும். போர்த்துக்கேய போல்கும் நடனங்கள் உள்ளூர் விருந்துபசாரங்களின்போது ஆடப்படுவதுண்டு. தவிர 'ச்சிலோலி' எனும் இசை நடனமும் இங்கு பிரபலமானது.

## காலநிலை



வெப்பவலய காலநிலையைக் கொண்டது. வெப்பமும் ஈரளிப்பும் மிகுந்தது. ஜூன் முதல் செப்டெம்பர் வரை உலர் பருவமாகும். ஒக்டோபர் முதல் மே வரை ஈரளிப்பான மழைப்பருவமாகும்.


தலைநகரிலுள்ள ஜனாதிபதி மாளிகை

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2005): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்-7,100; செல்லிடத் தொலைபேசிகள்- 12,000.

**வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (2002): AM1, FM5, SW1.

**தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (2002): 2.

**இணையத்தள வழங்குனர்கள்** (2007): 996; இணையத்தளப் பாவனையாளர்கள்: 23,000.


ஜனாதிபதி


பிரதமர்

## போக்குவரத்து

**பெருந்தெருக்கள்** (199 9): மொத்தம் 320 கி.மீற்றர் (இதில் செப்பனிடப்பட்டவை: 218 கி.மீ; செப்பனிடப்படாதவை: 102 கி.மீ.).

**துறையும் துறைமுகமும்:** சென்.அந்தோனியோ சாஓ டோம். **விமான நிலையங்கள்** (2007): 2.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம்: 8%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** கொக்கோ, தென்னை, பருப்பு வகைகள், மிளகு, கோப்பி, வாழை, கோழிப்பண்ணை, மீன். **கைத்தொழில்கள்:** மென் கட்டடப்பொருட்கள், புடவை, சவர்க்காரம், மீன் உற்பத்திப் பொருட்கள், மரத்தளபாடங்கள்.

**இயற்கை வளங்கள்:** மீன், நீர்மின்வலு. **ஏற்றுமதிகள்** (2009): கொக்கோ, கொப்பரை, கோப்பி, தாவர எண்ணெய். **இறக்குமதிகள்:** இயந்திரமும் மின்சார உபகரணங்களும், உணவு உற்பத்திப் பொருட்கள், பெற்றோலிய உற்பத்திகள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): நெதர்லாந்து, சீனா, பெல்ஜியம், ஜேர்மனி, போலந்து, பிரான்ஸ், பிரேஸில், போர்த்துக்கல், ஐக்கிய அமெரிக்கா, தென் ஆபிரிக்கா.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில....

- Cascada São Nicolãu நீர்வீழ்ச்சி
- Porto Alegre பழமையான மீன்பிடிக் கிராமம்
- ஓபோ தேசிய பூங்கா
- சாஓ செபஸ்டியாஓ கோட்டை
- Boca de Inferno நீரூற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறருக்கு உதவுவதை நோக்காக கொண்ட சாரணியம்



பேடன் பவல்



நாட்டுப்பற்றும்,எப்போதும் பிறருக்கு உதவுவதுமே என் மூச்சு' எனும் தாரக மந்திரத்தை உலகுக்கு எடுத்துக்காட்டிய மாமனிதர் 'றொபட் ஸ்டீவன்சன் ஸ்மித் பேடன் பவல் பிரபு' ஆவார். 'உலக சாரணியத்தின் தந்தை' என வர்ணிக்கப்படும் பேடன் பவல் மனித சமூகத்தின் மேம்பாட்டிற்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்த தலைமகன். 1857 பெப்ரவரி 22 ஆம் திகதியே பேடன் பவல் தினம் அல்லது ஸ்தாபகர் தினமாகும். இங்கிலாந்தில் பிறந்து தனது 19 ஆவது வயதில் இராணுவ வீரராகப் பயிற்சி பெற்றதன் பின் இந்தியா மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு சென்றவேளைகளில் பல்வேறு மனித இம்சைகளையும், அமைதியற்ற வாழ்வின் விளிம்பில் ஏங்கித் தவித்த மனித அவலங்களையும் பவல் கண்டு கொண்டதன் பின்னர் மீண்டும் இங்கிலாந்து வந்து இவற்றுக்கு விடிவுகாணும் நோக்குடன் 1907 ஆம் ஆண்டில் பிறவுன்ஸி தீவில் 20 மாணவர்களுடன் இணைந்து ஒன்றுகூடல் ஒன்றை நடத்தினார். இதுவே, சாரணியத்தின் முதல் ஒன்றுகூடலாக அமைந்தது.

ஒரு தனிமனிதன் மதம், கலாசாரத்திற்கு அப்பால் ஒரு புதிய சமூகத்தையே வெளிக்கொணர வைத்ததற்கு தன்னலமற்ற தியாக உணர்வும், மனித கௌரவத்தை மதிக்கும் பண்புமே முக்கிய காரணமாகும். இச்சாரணிய அமைப்பில் சுமார் 160 க்கும் மேற்பட்ட நாடுகள் உள்வாங்கப் பட்டிருப்பதற்கு அதுவே காரணமாகும்.





இன்றைய கல்வியின் நோக்கங்களில் மிகவும் பிரதானமானது ''நாட்டுக்குகந்த சிறந்த நற்பிரஜையை தோற்றுவிப்பதாகும்.'' அத்துடன், தேசிய குறிக்கோளில் முதன்மை வகிக்கும் ''மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருக்குள் தேசிய பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தலாகும்''

இதனையே சாரணியத்தின் அடிப்படைத் தத்துவங்கள் எடுத்தியம்புகின்றன. இதுவே அதன் சிறப்பம்சமாகவும் இருக்கின்றது. சமயத்தில் பற்று, நாட்டுப்பற்று, உலக சகோதரத்துவம், பிறருக்கு உதவுதல், சாரண விதிகளை மதித்து நடத்தல், அரச சார்பற்ற சமூக மேம்பாட்டுக்கு உழைத்தல், நாட்டிற்குகந்த நற்பிரஜையாக தன்னை உருவாக்கிக்கொள்ளல் போன்றன சாரணியத்தின் அடிப்படைத் தத்துவங்களாக கொள்ளப் படுகின்றன.



## இலங்கையில் சாரணர் இயக்கத்தின் தோற்றம்

பேடன் பவல் அவர்கள் 1921 மற்றும் 1934 ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். அவரது சிந்தனையில், உதித்து செயல்வடிவம் பெற்ற சாரணர் இயக்கம் 1912 ஆம் ஆண்டில் எமது நாட்டில் உருவாக்கம் பெற்றது. கொழும்பில் 1957ஆம் ஆண்டில் முதலாவது உலக 'ஜம்போரி' நடைபெற்றது. சாரணியத்தின் தார்ப்பரியம் உணரப்பட்டதன் காரணமாக, இதே ஆண்டில் நாடாளுமன்ற 13 ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் சாரணர் சங்கம் ஒரு அங்கீகாரம் பெற்ற அமைப்பாக நிறுவப்பட்டது.

'சாரணியத்தினூடாக, கல்வி' என அமைந்துள்ள சாரணியத்தின் செயற்பாடுகள் இன, மத, மொழி, சாதி வேறுபாடுகளுக்கப்பால் நல்ல பல பண்புகளை இளம் வயதிலிருந்தே வளர்த்துக்கொள்ளப் பாசறைகளும், ஒன்றுகூடல்களும் வழிகாட்டுகின்றன. பயிற்சிக்களமாக பாடசாலைகளில் இன்று ஒளிவிடும் இவற்றால், இலைமறை காய்களாக மங்கிய வெளிச்சத்திலிருந்த மாணவர்களை சிறப்பான கல்வியை பெறும் மாணவர்களாக மாற்றும் ஒரு சக்திமிக்க அமைப்பாக சாரணியம் வளர்ச்சிபெற்றுள்ளது.

வெறும் புத்தகக்கல்வியினால் பயனேதுமில்லை; செயற்பாட்டுடனான தேர்ச்சிமையக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ள இன்றைய கல்விப் புலத்தில் சாரணியத்தின் வேரூன்றலானது முக்கியத்துவமிக்கதாகவே உணரப்பட்டுள்ளது. சாரணியத்தில் பெறுகின்ற உயர் விருதான ஜனாதிபதி விருது மாணவர்களின் உயர்கல்விக்கும் பல்கலைக்கழக நுழைவுக்குத் துணைபுரியவும் சாரணிய செயற்பாடுகளிலும் உதவி நிற்கின்றன.

நாடு முழுவதும் பாடசாலைகள் மட்டத்திலும், பாடசாலையை விட்டு வெளியேறிய இளைஞர்கள் மத்தியிலும் இன்று சாரணிய செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றமை இதன் வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். 154 ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்த பேடன் பவலின் அயராத முயற்சியின் பலாபலனாக சாரணியம் பெரு விருட்சமாக உயர்ந்து வளர்ந்துள்ளது. இவ்வாறு வளர்ச்சி அடைந்தமைக்குக் காரணம், சாரணியத்தின் அனைத்து அம்சங்களிலும் மனிதாபிமானம் குடிகொண்டிருப்பதேயாகும். இத்தினத்தில் அன்னாரது சமூகத்தொண்டினை அரங்கேற்றி சாரணியம் என்றும் வாழ இதனை உருவாக்கிய ஸ்தாபகரை நினைவுகூருவோம்.

(ஊ)

சிங்கம் ஒன்று காட்டிலே
சோர்ந்து பசியின் களைப்பினால்
பாறையொன்றின் மீதிலே
படுத்து உறக்கம் கொண்டது.

பாறை அருகில் வளையினுள்
பதுங்கி வாழும் சுண்டெலி
உணவு தேடி உண்டிட
வெளியில் விரைந்து வந்தது.

அயர்ந்து உறங்கும் சிங்கத்தை
சிறிதும் காணாச் சுண்டெலி
பாறை என்று கருதியே
பாய்ந்ததன் மேற் சென்றது.

உடன் விழித்த சிங்கமும்
உறக்கம் கலைந்த சினத்தினால்
எலியை எட்டிப் பிடித்துமே
அதட்டி அதற்குச் சொன்னது.

''அற்பப் பயலே சுண்டெலி
அரசன் என்னை அறியாயோ?
சற்றும் மதித்திடாமல் நீ
உடலில் ஏறிச் செல்கின்றாய்!

என்ன திமிர் உன்னிடம்
அளவுக்கேற்ற செயலிதோ?
என்ன செய்கிறேன் உன்னைப்
பொறுத்திருந்து பாரிப்போ''

மிரட்டல் கேட்ட சுண்டெலி
நாவறண்டு பதறியே
நடுநடுங்கிச் சொன்னது
தாழ்மையான தொனியிலே



## சிங்கமும் சுண்டெலியும்

''மிருக ராச சிங்கமே
கருணை கூர்ந்து கேளுங்கள்
தாங்கள் என்பதறியாதே
தவறிழைத்த அற்பன் யான்

பெருந்தகையீர் தாங்களும்
பெருமனத்தால் மன்னித்தே
அருள வேண்டும் என்னையே
இனித் தவறேன் என்றுமே!''

என்றுரைத்த எலியதன்
கெஞ்சல் கேட்ட சிங்கமும்
நெஞ்சிரங்கி மன்னிக்க
நகர்ந்து எலியும் சென்றது.

பின் ஒருநாள் சிங்கம்
காட்டினில் உலவி வருகையில்
வேடன் வைத்த பொறியொன்றில்
வகையாய் மாட்டிக்கொண்டது.

''கடவுளே யான் என் செய்வேன்
தப்பிச் செல்வது எப்படி?
உதவி செய்ய எவரேனும்
உடன் வருவீர் ஐயையோ''

சிங்கம் ஒன்றின் அலறலைத்
தொலைவில் கேட்ட சுண்டெலி
விவரம் அறியும் ஆவலில்
விரைந்தே அங்கு சென்றது.

''அன்று என்னை மன்னித்த
சிங்கராசன் அல்லவோ
இன்று பொறியிற் சிக்கியே
தவித்திடுதே ஐயகோ!''

செய் நன்றி மறந்திடா
சின்னஞ் சிறிய சுண்டெலி
கடிதிற் சென்றே பொறியினை
அறுத்து அறுத்து அவிழ்த்ததே!

உயிரைக் காத்த எலியதன்
இமயம் ஒத்த உதவியை
உரிய வேளை செய்ததை
எண்ணிச் சிங்கம் மகிழ்ந்தது.

''சிறு துரும்பே ஆயினும்
பல் குத்த உதவுமே''
என்ற முது மொழியினை
எண்ணிச் சிங்கம் வியந்தது.

-சுலைமான் எம்.பரீட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - II (கடந்த வாரத் தொடர்ச்சி)

பெயர்: ............................................... நேரம்: 45 நிமிடங்கள்

31. நீலத்தூளை நீரில் கரைத்து, அதனை சிலநாட்கள் அசையாது ஓரிடத்தில் வைத்தபோது அவதானிக்கக்கூடிய செயற்பாடு எது?
    (1) நீரின் நீலநிறம் படிப்படியாக அதிகரிக்கும்
    (2) நீரின் மேற்பரப்பில் நீலத்தூள் மிதக்கும்
    (3) கரைசலின் நீலநிறம் மாறாதிருக்கும்
    (4) நீரின் அடியில் நீலத்தூள் படியும்

32. அசுத்த நீரைப் பருகுவதால் ஏற்படக்கூடிய நோய் அல்லாதது எது?
    (1) மஞ்சட்காமாலை (2) நெருப்புக் காய்ச்சல்
    (3) நீர்வெறுப்பு நோய் (4) கொலரா

33. நீரைக் கொண்டுள்ள கண்ணாடிக் குவளையில் சிறிதளவு தேங்காயெண்ணெய், மண்ணெண்ணெய் என்பன இட்டு சிறிது நேரத்தின் பின் அவதானிக்கக்கூடிய உரு எது?




34. மயக்கமுற்ற நோயாளிக்கு மிகப் பொருத்தமான முதலுதவியாக அமைவது;
    (1) ஆடைகளைத் தளர்த்தி காற்றுப்பட விசிறுதல்.
    (2) சிறிதளவு நீரைத் தெளித்தலும் அருந்துவதற்குக் கொடுத்தலும்.
    (3) தலையை நன்கு கீழ்நோக்கித் திருப்பிக் காற்றுப்படச் செய்தல்.
    (4) தலை நிமிர்ந்திருக்குமாறு அமரச் செய்து காற்றுப்பட விசிறுதல்.

35. தேசப்படங்களில் பாலத்தைக் காட்டுவதற்குப் பயன்படும் நிறம் எது?
    (1) சிவப்பு (2) கறுப்பு (3) நீலம் (4) கபிலம்

36.  இக்குறியீடு குறிப்பது;
    (1) கவனமாகக் கையாளுங்கள் (2) மின்தாக்குதல் ஏற்பட இடமுண்டு
    (3) இப்பக்கம் மேலே (4) நொருங்கக் கூடியது

37. ஓட்டவீரர் ஒருவர் ஓடிமுடித்தவுடன் செய்ய வேண்டியது;
    (1) எளிய பயிற்சியில் ஈடுபடுதல் (2) உடலை நீரினால் நனைத்தல்
    (3) குளிர்பானத்தைப் பருகுதல்
    (4) சிறிது நேரத்திற்கு நிலத்தில் கால்களை நீட்டியிருத்தல்

38. **2, 8, 9, 7** இந்த இலக்கங்கள் நான்கையும் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகச் சிறிய எண் யாது?........................................

39. 9,346 இல் நூறினிடத்து இலக்கத்தின் பெறுமானம் யாது?........................................

40. 7,342 ஐ எண்பெயரில் எழுதுக ........................................

41. 6,348 உடன் 465 ஐ கூட்டுக. கூட்டுத்தொகை யாது?........................................

42. 3,902 இலிருந்து 450 ஐக் கழிக்க. வித்தியாசம் யாது? ........................................

43. ஒரு கூடையில் 98 தேங்காய்கள் உள்ளன. அவ்வாறான 6 கூடைகளில் உள்ள தேங்காய்களின் எண்ணிக்கை யாது?........................................

44. 648 தோடம்பழங்கள் ஆறு பெட்டிகளில் சமனாக அடுக்கப்பட்டன. ஒரு பெட்டியில் உள்ள தோடம்பழங்களின் எண்ணிக்கை யாது? ........................................


45. சில நகரங்களுக்கிடையே உள்ள தூரங்கள் பின்வரும் உருவில் கிலோமீற்றரில் தரப்பட்டுள்ளன.




மாத்தறையிலிருந்து காலி, கொழும்பு ஊடாக, புத்தளத்திற்கு உள்ள தூரம் யாது? ..................

46. தரப்பட்டுள்ள அளவீடுகளுக்கேற்ப, உருவின் சுற்றளவைக் காண்க........................


காண்க




47. மீனாவின் நிறை 23kg 750g ஆகும். குமாரின் நிறை 18kg 850g ஆகும். இருவரும் பெரிய தராசொன்றில் ஏறி நின்றால் தராசு காட்டும் நிறை யாது?........................................

48. ரூபாய் 35.00 விலையுள்ள ஒரு வரைதல் புத்தகத்தையும் ரூபாய் 16.50 விலையுள்ள ஒரு வர்ணப் பெட்டியையும் வாங்கி நூறு ரூபாய்த் தாள் ஒன்றினைக் கொடுக்கும்போது கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு? ........................................


49. பகுதி எண் 6, தொகுதி எண் 4 ஆகவுள்ள பின்னத்தை உருவில் நிறந்தீட்டிக் காட்டுக.



50. கூட்டுக $\frac{2}{3} + \frac{1}{6} =$

51. 30 மாங்காய்கள் உள்ள குவியலொன்றில் $\frac{2}{3}$ பங்கு பழுத்தவை ஆகும். பழுக்காத மாங்காய்கள் எத்தனை?..................................

52. தரம் 05 மாணவர்கள் கொண்டுவந்த நான்கு வகையான உணவுகளைக் குறிப்பிடும் பூரணமற்ற வரைபு உருவில் காணப்படுகின்றது. இங்கு இடியப்பத்தைக் கொண்டுவந்த மாணவர்களின் எண்ணிக்கை பாண் கொண்டுவந்த மாணவர்களினதும் பயறு கொண்டுவந்த மாணவர்களினதும் கூட்டுத்தொகைக்குச் சமம். வரைபில் உரிய நிரலில் இடியப்பத்தைக் கொண்டுவந்த மாணவர்களின் எண்ணிக்கையைக் குறித்து அந்நிரலை நிழற்றுக.







53. அண்மைக்காலங்களில் மின்னல் தாக்கத்தினால் பல உயிரிழப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றைத் தவிர்ப்பதற்கு நீர் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை ஆறு வாக்கியங்களாக எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களேனும் இடம்பெற வேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலை தொடர்பு சரியாக இருக்க வேண்டும்)

........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................

## வினாத்தாள் - II இன் விடைகள்

*(மார்ச் 16,23 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)*

01. (i) புவி, உலகம், பூமி (ii) பெண்,குழந்தை
    (iii) துன்பம், கவலை (iv) தை, சித்திரை, ஆடி
    (i) நீ (vi) இந்து மக்களின்/ இந்துக்களின்
    (vii) சின்ன

02. (i) உளவு (ii) பறந்து

03. (i) சங்கர் தனது தாயைப் பார்த்து "நாளைக்குப் பாடசாலைக்கு வருவீர்கள்தானே?" என்று கேட்டான்.
    (ii) "ஐயோ! என்னைக் காப்பாற்ற மாட்டீர்களா?"

04. (i) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
    (ii) இலங்கை மின்சாரசபை

05. (i) ஏமாற்றுதல் (ii) நன்மை தீமை அறியாதவன்

06. (i) பழிக்குப் பயப்படாதே (ii) ஒற்றுமை

07. (i) Yellow (ii) Water (iii) Brother

08. (i) தயவு செய்து அமருங்கள். (ii) நான் புத்தகம் வாசிக்கிறேன்.


09. (i) நாங்கள் பாற்சோறு சாப்பிடுவோம். (ii) உங்கள் பெயர் என்ன?

| | | | | |
|---|---|---|---|---|
| 10. 1 | 11. 2 | 12. 4 | 13. 3 | 14. 1 |
| 15. 3 | 16. 2 | 17. 3 | 18. 2 | 19. 3 |
| 20. 4 | 21. 4 | 22. 3 | 23. 4 | 24. 2 |
| 25. 4 | 26. 2 | 27. 2 | 28. 3 | 29. 1 |
| 30. 1 | 31. 4 | 32. 3 | 33. 4 | 34. 3 |
| 35. 2 | 36. 2 | 37. 1 | 38. 2789 | 39. 300 |

40. ஏழாயிரத்து முந்நூற்று நாற்பத்து இரண்டு  41. 6813  42. 3452

43. 588 தேங்காய்கள்  44. 108 தோடம்பழங்கள்  45. 303km

46. 24km  47. 42kg600g  48. ரூபாய் 48.50

49.   50. 5/6  51. 20 மாங்காய்கள்  52. 


53. ✱ எழுவாய் பயனிலையுடன் பொருத்தமான ஆறு வாக்கியங்கள்.
✱ ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்களைக் கண்போல் காத்திடுவோம்!



**'நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுத்ததற்குப் பின்னர் நாம் தேர்ந்தெடுக்க வேண்டியது நல்ல நூல்களைத்தான்!' என்ற வாசகம் நூல்களின் மகிமையை நமக்கு மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. உண்மையில், சிறந்த நூல்கள் நம் ஒவ்வொருவருக்கும் சிறந்த கல்வியை வழங்குவதோடு, வாழ்வில் நன்மை-தீமைகளை எடுத்துக்கூறி, நம்மை நல்வழிப்படுத்தி நற்பிரஜைகளாக மிளிர்வதற்கும் வழிவகுக்கின்றன**

எனினும், இந்த நூல்களை சிறந்த முறையில் பாதுகாத்து, அதனை ஏனையவர்களும் பயன்படுத்தக்கூடிய விதத்தில் கையாள்வதற்கு நம்மில் பலரும் தவறிவிடுகின்றனர். இது நமது கல்விச் செல்வத்தை நாம் அகௌரவப்படுத்துவதாக அமைந்துவிடுகின்றது. எனவே, புத்தகங்களை உரிய முறையில் பாதுகாத்துப் பயன்படுத்துவது நம் ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும்.

## இவற்றையும் மனதிற் கொள்ளுங்கள்

கிழிந்த தாள்கள், கழன்ற தாள்களையுடைய புத்தகங்கள் மற்றும் அழுக்குப் படிந்த நிலையிலுள்ள பாடப்புத்தகங்கள் உள்ளிட்ட எந்தவொரு புத்தகத்தையும் பெற உங்களைப்போன்றே ஏனைய பிள்ளைகளும் விரும்புவதில்லை. எனவே, புத்தகங்களைப் பாவிக்கும்போது, மற்றவர்களும் அதனை மீளப் பாவிப்பதற்கு உகந்தவாறு கையாளுங்கள். பின்வரும் வகைகளில் அது அமையவேண்டும்.

* புத்தகங்களுக்கு ஒழுங்காக மேலுறைகளை இடுங்கள். அதற்கு மேலாக பொலிதீன் உறையையும் இடுங்கள். Stapler pin அடிப்பதைத் தவிருங்கள்.
* புத்தகங்களில் கிறுக்குதல், தாள்களைக் கிழித்தல், கோடிடுதல் போன்றவற்றைத் தவிருங்கள்.
* தாள்கள் அல்லது மேலட்டை



கழன்று இருப்பின், பசை (gum) பூசி ஒட்டுங்கள். அல்லது தைத்துக்கொள்ளுங்கள்.
* நீர், சாயம், எண்ணெய் மற்றும் எச்சில் ஆகியன படியாமல் வைத்திருங்கள்.
* அழுக்குள்ள கைகளால் புத்தகங்களை கையாள்வதைத் தவிருங்கள்.
* புத்தகப்பைக்குள் புத்தகங்களை வைக்கும்போது, புத்தகங்களின் கோணங்கள் (மூலை) மடியாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

## இலவச பாடநூல்களை பாதுகாப்பது உங்கள் கடமை



இலங்கையில் அரசாங்கப் பாடசாலைகளில் இலவசக் கல்வி வழங்கப்படுவதன் அடிப்படையில், மாணவர்களுக்கு அரசாங்கத்தினால் இலவச பாடநூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அரசாங்கம் இதற்கென்றே ஒவ்வொரு வருடமும் பெருந் தொகையான நிதியை ஒதுக்கீடு செய்கின்றது. எனவே, அவ்வாறு இலவசமாகக் கிடைக்கும் புத்தகங்களை கவனமாகக் கையாள வேண்டியது ஒவ்வொரு மாணவரதும் கடமையாகும். அத்துடன், அந்தப் புத்தகங்களை தாம் பாவித்த பின்னர் அடுத்த வருடம் அந்தப் பாடப்புத்தகங்களைப் பெறும் மாணவர்கள் அதனை ஏனைய மாணவர்கள் மீளப் பயன்படுத்தக்கூடிய வகையில் பாதுகாத்துக் கையளிக்க வேண்டும். இந்தப் பழக்கம் குறித்த மாணவரின் நற்பண்பினையும் ஒழுக்கத்தையும் வெளிப்படுத்துவதாக அமையும். இலவசமாகக் கிடைக்கின்றது என்பதற்காக கவனயீனமாக இருக்கக் கூடாது.

எனினும், தற்போது மாணவர்கள் தமது புத்தகங்களை சிறப்பாகக் கையாண்டு வருவதனால், புத்தகங்களை மீள் பயன்பாட்டுக்கு உட்படுத்த முடிந்துள்ளது. இதனால், அரசாங்கத்திற்கு பெருந்தொகை நிதியை சேமிக்க முடிந்துள்ளது. இது ஒரு வகையில் அரசாங்கத்துக்கு மாணவர்கள் செய்கின்ற சிறந்ததோர் உதவியாகும்.

**'பாடப் புத்தகங்களைப் பெறும் மாணவர்கள் அதனை ஏனைய மாணவர்கள் மீளப் பயன்படுத்தக்கூடிய வகையில் பாதுகாத்துக் கையளிக்க வேண்டும். இந்தப் பழக்கம் குறித்த மாணவரின் நற்பண்பினையும் ஒழுக்கத்தையும் வெளிப்படுத்துவதாக அமையும்'**

## புத்தகத்துக்கான மதிப்பு

புத்தகத்தின் மதிப்பு ஒருபோதும் குறைந்துவிடுவதில்லை. உலகில் பல சாதனைகள் நிகழ்த்தப்பட்டதன் பின்னரும், புத்தகங்களே உள்ளன. அறிவுபூர்வமான புத்தகங்கள் சிறந்த புத்திஜீவிகளை உருவாக்குவதில் முன்நிற்கின்றன. அதனால்தான், ஊடகத்துறையில் வானொலி, தொலைக்காட்சி, கணினி என பல்வேறு முன்னேற்றங்கள் நிகழ்ந்தபோதும், புத்தகத்துக்குரிய மதிப்பு இன்றுவரை குறையாமல் இருக்கின்றது.

## புத்தகங்களை நேசித்தல்



புத்தகத்தை மதித்து அதை, அக்கறையோடு வாசிக்கும் பிள்ளையிடம் திறமை வளரும். அத்தகைய ஒருவர் உலகை ஆதரிக்கவும் கற்றுக் கொள்வார். தனது சிருஷ்டிப்பையும் திறமையையும் வளர்த்துக்கொள்வார். எழுதவும் வாசிக்கவும் தேவையான திறமையை தம்முள் வளர்த்துக்கொள்வார். அதனால், பரீட்சையிலும் சிறப்புறத் தேர்ச்சி பெறுவார்.

ஆகவே, நீங்களும் புத்தகங்களை நேசிக்கும் பிள்ளைகளாக மாறுங்கள். எப்போதும் அவற்றை வாசியுங்கள். வாசிப்பு மனிதனை முழு மனிதனாக்கும். எனவே, உங்கள் வாழ்வின் வெற்றிக்கும் கல்வி மேம்பாடடையவும் புத்தகங்கள் உங்களுக்கு என்றும் துணைபுரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணயத்த

*தற்போது உலகெங்கும் வேகமாக வியாபித்திருக்கின்ற, கொடுக்கல்- வாங்கலின் போது, நம் அனைவருக்கும் அவசியமாகின்ற, இன்றியமையாத ஒரு விடயம்தான் 'பணம்'. உலகளாவிய ரீதியில் தாள்காசுகள் மற்றும் நாணயக்குற்றிகள் புழக்கத்தில் உள்ளன. அந்தவகையில், நாணயத்தாளின் வரலாறு பற்றி நோக்குவோம்*



## இலங்கையின் ஆரம்பகால நாணயத்தாள்



இலங்கையில் வெளியிடப்பட்ட முதலாவது நாணயத்தாள் இரு வகைகளில் அமைந்திருந்தது. அவை 'கிரடிட் ப்ரீவன்' மற்றும் 'கஸ்நூடன்' எனும் ஒல்லாந்த நாணயங்களாகும். இவை ஒப்பந்தப்பத்திரத்தைப் போன்று காணப்பட்டன.பின்னர், ஆங்கிலேயர் ஆட்சிகாலத்தில் (1851 முதல் 1884 வரை) இலங்கையின் திறைசேரியினால் ரிக்ஸ் டொலர் நாணயத்தாளும் பவுண் நாணயத்தாளும் ஒரு ரூபா நாணயத்தாளும் வெளியிடப்பட்டன. இதன் பின்னரே தனியார் வங்கிகள் நாணயத்தாள்களையும் நாணயக்குற்றிகளையும் வெளியிடுவதற்கான அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி, ஏஷியாடிக் (ச்)சார்டட் மேர்கன்டைல் ஓரியன்டல் எனும் தனியார் வங்கிகளால் நாணயத்தாள்கள் வெளியிடப்பட்டன. பின்னர், 1885 முதல் 1950 வரை நிதி ஆணையாளர் குழுவினால் நாணயத்தாளும் நாணயக்குற்றிகளும் வெளியிடப்பட்டன. இதன்போது, 25 சதம் மற்றும் 50 சதம் நாணயத்தாள்களும் 10,000 ரூபாய்த்தாளும் வெளியிடப்பட்டன.

## இலங்கையிலுள்ள நாணயத்தாள்களின் வகைகள்

1951 ஆம் ஆண்டிலிருந்து மத்திய வங்கியால் நாணயத்தாள்கள் மற்றும் நாணயக்குற்றிகள் வெளியிடப்படத் தொடங்கின. அன்றிலிருந்து இன்று வரை மத்திய வங்கியால் பல்வேறு வகைகளில் வெவ்வேறு பெறுமதிகளையுடைய நாணயத்தாள்களும் குற்றிகளும் வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

VI ஜோர்ஜ் மன்னனின் உருவமுடைய நாணயத்தாள்கள் (1951)



II ஆம் எலிஸபெத் ராணியின் உருவமுள்ள நாணயத்தாள்கள் (1952)



இலங்கையின் அரச இலச்சினை பதித்த நாணயத்தாள்கள் (1956)



பண்டார நாயக்கவின் உருவமுள்ள நாணயத்தாள்கள் (1961)



மகா பராக்கிரமபாகு மன்னனின் உருவம் பதித்த நாணயத்தாள்கள் (1965)



குடியரசின் இலச்சினை பதித்த நாணயத்தாள்கள் (1975)



பறவைகளையும் மரங்களையும் உள்ளடக்கிய நாணயத்தாள்கள் (1979)



தொல்பொருளியல் மற்றும் வரலாற்றுப் பின்னணியை கருப்பொருளாகக்கொண்ட நாணயத்தாள்கள் (1981)



இலங்கையின் நோக்கத்தையும் அபிவிருத்தியையும் வெளிப்படுத்தும் நாணயத்தாள்கள் (1987)



இலங்கையின் மரபுரிமைகளை வெளிப்படுத்தும் நாணயத்தாள்கள் (1991)



## நாணயத்தாள் அச்சிடுதல்

இங்கிலாந்திலுள்ள 'போடல்ஸ்' நிறுவனத்திடமிருந்தே எமக்குத் தேவையான நாணயத்தாள்களை அச்சிடப் பயன்படும் கடதாசிகள் கொள்முதல் செய்யப்படுகின்றன. 1987 ஆம் ஆண்டு பியகமையில் நிறுவப்பட்ட 'ப்ரேட்பரி வில்கின்சன்' நிறுவனத்தின் கிளை நிறுவனத்தால் தற்போது எமது நாட்டில் நாணயத்தாள்கள் அச்சிடப்படுகின்றன. இதன் தாய் நிறுவனம் 1990 ஆம் ஆண்டில் தோமஸ் டிலாரு நிறுவனத்தால் வாங்கப்பட்டதால், இந்நாட்டிலுள்ள நிறுவனமும் அந்தப் பெயராலேயே அழைக்கப்படுகிறது.

## பொலிமர் நாணயத்தாள்

உலகில் இதுவரை அச்சிடப்பட்ட விசேட நாணயத்தாள் 'பொலிமர்' நாணயத்தாளாகும். இது சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் தற்போதும் பாவனையில் உள்ளது. அண்மையில் இலங்கையில் புழக்கத்திற்கு வந்த 200 ரூபாய்த் தாளும்கூட பொலிமர் நாணயத்தாளாகும்.பாதுகாப்பு முறையில் இந்த நாணயத்தாளுக்கு முக்கியத்துவம் உண்டு.

## ஞாபகார்த்த நாணயத்தாள்கள்

விசேட சந்தர்ப்பங்களிலும் விசேட பிரமுகர்களை ஞாபகப்படுத்தவும் என ஞாபகார்த்த நாணயத்தாள்கள் வெளியிடப்படுகின்றன. அதற்கு நிதிச் சட்டமூலத்தில் அனுமதி உண்டு. அதன்படி, இலங்கை மத்திய வங்கி இரு ஞாபகார்த்த நாணயங்களை வெளியிட்டுள்ளது.

1. இலங்கை காலனித்துவத்திலிருந்து விடுபட்டு, சுதந்திரம் பெற்ற 50 வருட பூர்த்தி விழாவைக் கொண்டாடு முகமாக, 1998 ஆம் ஆண்டு 200 ரூபாய் பெறுமதியுடைய நாணயத்தாள் வெளியிடப்பட்டது. அதில் விஜயனின் வருகையிலிருந்து இலங்கை சுதந்திரம் பெற்றது வரையான முக்கிய நிகழ்வுகள் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன.

2. 30 வருடகால யுத்தத்தை ஒழித்து இலங்கையில் சமாதானம் ஏற்பட்டதைக் கொண்டாடு முகமாக, 2009 ஆம் ஆண்டு ஞாபகார்த்த நாணயத்தாளொன்று வெளியிடப்பட்டது. தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் உருவம் பதிக்கப்பட்ட அதன் பெறுமதி 1000 ரூபாவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாளின் வரலாறு



## நாணயத்தாள்களை சுத்தமாகக் கையாள்வோம்

✤ நாணயத்தாள்களை சுத்தமாகப் பேணுவதுடன், சிறப்பாக கையாள்வதன் மூலம் கொடுக்கல்-வாங்கல் சிறப்பாக அமையும்.

✤ நாட்டில் புழக்கத்திலுள்ள சுத்தமான நாணயத்தாள்களின்மூலம் நாட்டு மக்களின் தேசாபிமானம் வெளிநாட்டவருக்குத் தெரியப்படுத்தப்படும்.

✤ நாணயத்தாள்களில் பொறிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அடையாளம் சுத்தமான நாணயத்தாளில் இலகுவில் தென்படும். அதுவே, அந்த நாணயத்தாள் உருக்குலைந்து, அழுக்குப்படிந்து காணப்பட்டால், எது உண்மையானது, எது போலியானது என்பதை இனங்காண முடியாதிருக்கும்.

✤ அசுத்தமாகக் கையாள்வதன் மூலம் அதனூடாக, ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு தொற்றுநோய்கள் பரவும் வாய்ப்பும் உள்ளது.அதனால், நாணயத்தாள்களை சுத்தமாகவும் நேர்த்தியாகவும் கையாள்வது சுகாதாரத்திற்கு நல்லது.

✤ நாணயத்தாளில் கிறுக்குதல், சித்திரம் வரைதல், எழுதுதல் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.

✤ நாணயத்தாளை தாறுமாறாக மடிப்பதையும் கிழிப்பதையும் தவிருங்கள்.

✤ எலிகள், பூச்சிகள், கறையான்கள் ஆகியவற்றால் சேதம் விளைவிக்கக்கூடிய இடங்களில் அவற்றை வைக்காதீர்கள்.

✤ ஈரளிப்பான இடங்களிலோ, பாத்திரங்களிலோ, நெருப்பினாலோ, சேதமேற்படக்கூடிய இடங்களில் நாணயத்தாள்களை வைக்காதீர்கள்.

✤ நாணயக்குற்றிகளைச் சேமிக்கும் உண்டியல்களில் நாணயத்தாள்கள் இடுவதைத் தவிருங்கள்.

## போலி நாணயத்தாள்களை இனங்காண்பது எவ்வாறு?

✤ **நீர்க்கோடு:** நீர்க்கோடாக (Watermark) சில நாணயத்தாள்களில் தேசிய கொடியில் உள்ள சிங்கம் உள்ளடக்கப்பட்டுள்ளது. 1995 ஆம் ஆண்டுக்கு முன்னர் வெளியிடப்பட்ட நாணயத்தாள்களில் அந்த சிங்க உருவம் மிகப் பிரகாசமானதாகவும் 1995 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வெளியிடப்பட்ட நாணயத்தாள்களில் சிங்கத்தின் கையிலுள்ள வாளானது உருவத்தின் ஏனைய பகுதியை விடவும் மிகப் பிரகாசமாகத் தெரியும் வகையிலும் பொறிக்கப்பட்டுள்ளது.

✤ **பாதுகாப்பு நூல்:** இது பல்வேறு வகைப்படும்.

1. 2002 ஆம் ஆண்டுக்கு முன்னர் வெளியிடப்பட்ட 1000 மற்றும் 500 ரூபா நாணயத் தாள்களில் இடத்துக்கிடம் தென்படும் வகையில் சுமார் 15 மி.மீ. அகலத்தில் ஸ்டாடஸ்ட் எனும் வெள்ளி நிறத்திலான உலோக நாடாவாக இந்த நூல் அமைந்துள்ளது.

2. 2002 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அச்சிடப்பட்ட 1000 ரூபாய்த் தாளில் 4 மி.மீ. அகலத்தில் இலங்கை டேசி மலர் அலங்காரத்துடன், இடத்துக்கிடம் தோன்றும் 'ஸ்டார் வைட்' எனும் வெள்ளி நிறத்திலான உலோக நாடாவாக இந்த நூல் அமைந்திருக்கும்.

3. 2002 ஆம் ஆண்டிலிருந்து 2005 ஆம் ஆண்டுவரை வெளியான 500 ரூபாய்த்தாளில் 3 மி.மீ. அகலத்தில் இலங்கை டேசி மலர் அலங்காரத்துடன் இடத்துக்கிடம் தெரியும்படி 'ஸ்டார் வைட்' எனும் வெள்ளி உலோக நாடாவாக இந்த நூல் காணப்படும்.

4. 2005 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வெளியான 500 மற்றும் 2000 ரூபாக்களில் வண்ணத்துப் பூச்சியின் உருவமும் நாணயத்தின் பெறுமதியும் இலக்கத்தில் காணப்பட்டதோடு, நாணயத்தாளை பல்வேறு கோணங்களில் பார்த்தால் நூலின் நிறம் பச்சையாகவும் சிவப்பாகவும் மாறிமாறித் தெரியும். ஸ்டார்க்ரோம் எனும் இடத்துக்கிடம் மாறுபட்டுத் தெரியும் நூலாக அது அமைந்துள்ளது.

✤ **ஊடுருவும் தன்மை:** நாணயத்தாளின் முன்புறமும் பின்புறமும் ஒன்றுக்கொன்று சமமாகத் தெரியும்படி அச்சிடப்பட்டுள்ள ஒரேமாதிரியான இரண்டு உருவங்களை வெளிச்சத்தில் பார்த்தால், இரண்டும் சமமாகத் தெரியும் விதத்தில் அமைத்திருத்தல்.

✤ இன்டெக்லியோ அச்சுமுறைப்படி, நாணயத்தாளின் சில பகுதிகளை கையில் படும் விதத்தில் உயர்தரத்தில் அச்சிடுதல்.

✤ விசேட அச்சு இயந்திரத்தின்மூலம் இலக்கம் மாத்திரம் அச்சிடப்பட்டிருத்தல். அச்சிடப்படும் கடதாசி 100% பருத்தி கலந்த நாரினால் தயாரிக்கப்பட்டிருக்கும்.


✤ **கோர்னர்ஸ்டோன் பாதுகாப்பு அடையாளம்:** 2005 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வெளியிடப்பட்ட 500 ரூபாய், 2000 ரூபாய்த் தாள்களின் நான்கு கோணங்களிலும் கோடிடப்பட்ட நீர்க்கோடுகள் காணப்படும். வெளிச்சத்தில் வைத்துப் பார்த்தால் அது தெரியும்.

✤ **மின்னும் நாடா:** 2000 ரூபாயின் பின்புறத்தில் தங்க நிறத்தில் மின்னும் நாடாவொன்று நாணயத்தாளில் செங்குத்தாக அச்சிடப்பட்டுள்ளது.

✤ **மறைந்துள்ள அடையாளம்:** நாணயத்தாளை வெளிச்சத்தில் சற்று சரிவாக வைத்துப் பார்த்தால் நாணயத்தாளின் கீழ்ப்பகுதியின் நடுப்பகுதியில் அதன் பெறுமதி இலக்கத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம்.

## உலகின் முதலாவது நாணயத்தாள்

உலகில் கைத்தொழில் முன்னேற்றம் அடைந்ததை அடுத்து பல்வேறு



உற்பத்திப் பொருட்கள் மக்களிடையே பரிமாற்றத்துக்குள்ளாகின. காலப்போக்கில் பொருட்களின் தேவைப்பாடுகளுக்கமைய அவற்றின் பெறுமதி அதிகரிக்கத் தொடங்கியது. இதனை அடுத்தே பணத்தின் தேவை உணரப்பட்டது. இவ்வாறு பரிணாமம் பெற்ற பணம் நாளடைவில் நாட்டுக்கு நாடு வித்தியாசப்பட்டது. ஒவ்வொரு நாடும் தமக்கென நாணய அலகுகளை வகுத்து அதற்கமைய தமது நாட்டில் நாணயங்களைப் புழக்கத்தில் விட்டுள்ளது.

## உலகில் புழக்கத்தில் உள்ள பிரதான நாணய அலகுகள்

### டொலர்








$எனும் அடையாளம் மூலமே டொலர் குறிக்கப்படுகிறது. அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, கெனடா, கிழக்கு கெரிபியன் அரசு, ஹொங்கொங், தாய்வான், சிங்கப்பூர், புரூணை, கிழக்கு திமோர், ஈக்வடோர், சூரினாம், எல்செல்வடோர், பனாமா, பெலிஸ் ஆகிய நாடுகளில் டொலர் புழக்கத்தில் உள்ளது. எனினும், அதன் பெறுமதி நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. 'கில்டினர்' எனும் காசு வகையே டொலரின் தோற்றத்திற்கு வழிவகுத்ததாகக் கருதப்படுகிறது. அது 1948 ஆம் ஆண்டு புழக்கத்தில் இருந்திருக்கிறது. ஒஸ்ட்ரியாவின் ஒரு மாநிலத்தின் பேரரசனாக இருந்த கிகிஸ் மொன்டி என்பவரின் காலத்திலேயே அது புழக்கத்தில் இருந்துள்ளது.

### யூரோ



யூரோ நாணய வகை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் புழக்கத்தில் உள்ளது. 1995 ஆம் ஆண்டு முதல் உத்தியோகபூர்வமாகப் பாவனைக்கு வந்தது. 1999 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அது உலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்டபோதும், யூரோ நாணயக் குற்றியும் தாளும் 2002 ஆம் ஆண்டே சந்தைக்கு வந்தன.

### யென்




இது ஜப்பானின் நாணய அலகாகும். உலக வர்த்தக சந்தையில் மூன்றாமிடத்தை வகிக்கும் நாணய அலகாகும். அமெரிக்க டொலர், ஐரோப்பிய ஒன்றியத்தின் யூரோ, இங்கிலாந்தின் ஸ்டேர்லிங் பவுண் ஆகியவற்றுக்கு அடுத்ததாக அதிகம் புழக்கத்தில் இருப்பது யென் ஆகும்.

### இந்தியாவின் நாணய அலகு

இந்தியா அதன் நாணய அலகின் அடையாளத்தை அண்மையில் மாற்றியமைத்தது.

₹

இந்த புதிய அடையாளம் ஆங்கில அரிச்சுவடியின் R எனும் எழுத்தையும் பண்டைய இந்திய தேவனாகரி நெடுங்கணக்குக்குரிய 'ரா' எனும் எழுத்தையும் கலந்து வடிவமைக்கப்பட்டதாக உள்ளது.

**ஏ.ஜே.எம்.நிழாம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமையிற் கல்வி



'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்பது முதுமொழி, கற்க வேண்டியவற்றை இளமைப் பருவத்திலேயே கற்க வேண்டும். கற்பதற்குரிய பருவம் இளமைப் பருவமே. இந்த உண்மையை சகலரும் ஏற்றுக் கொள்வர். இளமைப் பருவம் கவலையற்ற பருவம். இப்பருவத்தில் நாம் பெற்றுக்கொள்ளும் அறிவும் திறனும் அனுபவமும் நமது எதிர்கால வாழ்க்கைக்கு அடிக்கற்களாக அமைய வல்லன. எனவேதான் பெரியார்கள் 'இளமையில் கல்' என்று வலியுறுத்துகிறார்கள். இளமைப் பருவத்தில் நாம் பெறும் கல்வி கல்லில் பொறித்த எழுத்துப்போல் என்றும் அழியாது இருக்கும்.

நாம் இளமைப் பருவத்திலேயே கல்வி அறிவைத் தேடிக்கொள்ள வேண்டும் என்பதற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. முக்கியமாக இளமைப் பருவமே கல்வியை மனதில் பதித்துக்கொள்வதற்கு ஏற்ற பருவம் என்று உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

இளமையில் பெறும் கல்வி நம் உள்ளத்தைப் பண்படுத்த வல்லது. நல்லது எது? கெட்டது எது? என்பதை அறிந்துகொள்ள உதவுகிறது. நமது வருங்கால வாழ்வை வளம் நிறைந்ததாக அமைத்துக்கொள்ளப் பயன்படுகிறது. எனவே, நாம் இளமையிலேயே பயன் தரும் கல்வியைப் பெற்றிட முயல வேண்டும்.

N.F. சஸ்னா, சென். அன்றூஸ் பாலிகா.ம.வித்., நாவலப்பிட்டிய.

# கருமியும் கலைஞனும்



இசைக் கலைஞன் ஒருவன் ஊர் ஊராகச் சென்று தனது இசைத்திறமையைக் காட்டி பரிசுகள் பெற்று வாழ்க்கையை நடத்தி வந்தான். ஒரு நாள் ஓர் ஊரை அடைந்த அவன் அங்கே வீதியில் ஒருவனைப் பார்த்து, ''இந்த ஊரில் பெரிய பணக்காரர் யார்?'' என்று கேட்டான். 'பெரிய மாளிகை ஒன்றைக் காட்டி அவன் தான் இங்கு பணக்காரன்' என்றான் வழிப்போக்கன். அவன் கஞ்சக் கருமி என்பதை அறியாத கலைஞன் அங்குசென்று மாளிகைக் கதவைத் தட்டினான்.

பணக்காரன் கதவைத் திறந்தான். ''ஐயா! நான் இசைக் கலைஞன். என் திறமையை உங்களிடம் காட்ட வந்துள்ளேன்'' என்றான்.

''மிக்க மகிழ்ச்சி பாடுங்கள் கேட்போம்'' என்றான் பணக்காரன். தன்னுடைய திறமையைக் காட்ட சரியான வாய்ப்பு என்று நினைத்த கலைஞன் பலவித ராகங்களில் இனிமையாகப் பாடத் தொடங்கினான். கருமியோ தலையை மேலும் கீழும் ஆட்டிய வண்ணம் தன்னை மறந்தவன் போல பாடலைக் கேட்டுக்கொண்டிருந்தான். நீண்ட நேரம் பாடியதால் அவனுக்குச் சோர்வு ஏற்பட்டது.

இதைப்பார்த்த கருமி தன் வேலைக்காரனை அழைத்து, ''இப்படிப்பட்ட கலைஞனுக்குப் பரிசு வழங்க வேண்டும். நூறு பொற்காசுகளும் பட்டுப் போர்வையும் எடுத்துவா'' என்றான். '' அப்படியே கொண்டு வருகிறேன்'' என்று சொல்லி உள்ளே சென்றான் வேலைக்காரன்.

பெரிய பரிசு கிடைக்கப் போகிறது என்று மகிழ்ந்தான் அவன். மேலும் பல ராகங்களில் தொடர்ந்து பாடிக்கொண்டிருந்தான். விடாமல் பாடியதால் அவனுக்கு மூச்சு வாங்கியது. வேலைக்காரனை மீண்டும் அழைத்த கருமி ''இவருக்குப் பரிசளிக்க முத்துமாலை, வைர மோதிரம் இவற்றையும் சேர்த்துக்கொண்டுவா'' என்றான்.

'ஆ! நல்ல நாள் இன்று! இவ்வளவு பரிசுகள் கிடைக்கப் போகின்றன' என்ற மகிழ்ச்சியில் தன் துன்பத்தையும் பொருட்படுத்தாமல் பாடிக்கொண்டிருந்தான் அவன். பாட்டு ஒரு வழியாக முடிந்தது.

''ஐயா! மிக நன்றாகப் பாடினீர்கள். மகிழ்ச்சி! போய் வருகிறீர்களா?'' என்றான் கருமி.

திகைத்த கலைஞன், ''தாங்கள் தருவதாகச்சொன்ன பரிசுப் பொருள் எதுவும் தரவில்லையே?'' என்று கேட்டான்.

''எதற்கு உமக்குப் பரிசு தரவேண்டும்? நீர் என் காதிற்கு இனிமையாக ஏதோ பாடினீர். அதற்குப் பதிலாக உமது காதுக்கு இனிமையாக ஏதோ சொன்னேன். அவ்வளவுதான். வருபவர்களுக்கு எல்லாம் வாரி வழங்க இங்கே கொட்டியா கிடக்கிறது?'' என்றான் பணக்காரன். கருமியிடம் சிக்கிக் கொண்டதன் தலைவிதியை நொந்த வண்ணம் வெளியே வந்தான் கலைஞன்.

எச்.எம்.அஸ்லம், தரம்-11[B], மட்/ஓட்டமாவடி தே.பாட., மட்டக்களப்பு.




# கல்வி



அறிவுச்சுடராய் வந்தது கல்வி!
ஆற்றலை எனக்கும் தந்தது கல்வி!
என்னை வாழவைத்தது கல்வி!
என்னை ஆசானாக்கியது கல்வி!

முள்ளில் வளர்வது ரோஜா!
சேற்றில் மலர்வது தாமரை!
கொடியில் படர்வது மல்லிகை!
என் மனதில் படர்வது கல்வியே!

எம்.எஸ்.எம்.ஜிஸ்கான், கமு/அல்-மினா வித்., நிந்தவூர்.

# வேடுவ தலைவரின் முன்மாதிரி



இலங்கையில் தம்மானை எனும் ஊரில் வசித்த ஆதிவாசிகளின் தலைவரான திசாஹாமி எளிமையான சமநிலையான வாழ்வை நடத்தி சமூகத்திற்கு முன்மாதிரியான தலைவராக வாழ்ந்தார். இவர் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்னர் தனது இனத்தவரை நோக்கி அவர் கூறியதாவது;

''நான் இறந்ததும் பெரும் வைபவம் நடத்துவதற்கும் தோரணம் கட்டுவதற்கும் இக்காட்டில் உள்ள ஒரு மரத்தையேனும் வெட்ட வேண்டாம். கொடிகளைத் தொங்கவிட்டு அழிவையும் ஏற்படுத்த வேண்டாம். எமது பாரம்பரிய மரபுக்கேற்ப, எனது இறுதிக் கிரிகைகளை செய்யுங்கள். எனக்கு நீங்கள் தரும் பெரும் கௌரவம் இதுவாகும். எனக்காக என்றாலும் இக்காட்டின் மரங்களை வெட்டுவதைத் தவிருங்கள். அவ்வாறு நீங்கள் நடக்கத்தவறுவீர்களாயின் அது எமது பரம்பரைக்கு நீங்கள் செய்யும் பெரும் குற்றமாகும்''.

எஸ்.எம்.நப்ரிஸ், தரம்-10C, ஷாஹிரா கல்., [illegible]

# அற்புதப் படைப்பு தாய்



உலகில் இனிமையான வார்த்தை அம்மா; துன்பத்திலும் துயரத்திலும் வருவது அம்மா; குழந்தையின் முதல் வார்த்தை அம்மா; பசுக்கூட அம்மா என்றே கதறும். இறைவனது சிருஷ்டியில் தாய் என்பவர் அற்புதப் படைப்பு. கருவில் உயிர்கொடுத்து பத்துமாதம் சுமந்து அந்த உயிர் வாழ்வதற்கு உடலையும் உதிரத்தையும் கொடுத்து, பிறந்த பின்பும் உதிரத்தை பாலாக்கிக் கொடுத்து இரவு பகல் கண் விழித்து கட்டிலிலும், தொட்டிலிலும், தோள் மீதும் போட்டு சீராட்டித் தாலாட்டி வளர்த்தெடுப்பவர் தாய்.

நல்ல் அறிவுரைகளை கூறி நல்வழி [illegible] வழி பார்த்து வந்தவுடன் அன்பாய் உண ஊட்டி வளர்க்கும் தெய்வம் பிள்ளைக்கு முதல் உபாத்தியாயினி அம்மா. அர்ப்பணிப்பும், தியாகமும், மென்மையும், அன்பும், கருணையும் நிறைந்த அன்பின் இருப்பிடம், தன் பிள்ளைக்காக தனது அனைத்து நலன்களையும் தியாகம் செய்யும் தியாக தீபம். இத்தனை சிறப்புமிக்க தாயை போற்றாதவர்களுக்கும் வணங்காதவர்களுக்கும் நற்கதி கிட்டாது.

நல்ல பண்புமிக்க சமுதாயம், நல்ல குடிமக்கள் உருவாக நல்ல தாய்மார்களே காரணம் என நெப்போலியன் கூறினார். உலகை ஆட்டிப்படைத்த ஹிட்லர் தனது உயிர் பிரியும் நேரத்தில் தாயின் படத்தை தழுவியபடியே நாற்காலியில் சரிந்து கிடந்தார். தாயின் அன்பு, அர்ப்பணிப்பு, தியாகம், பொறுமை இவை தெய்வத்திலும் சிறப்புமிக்கது என்பதாலேயே ''தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை'' என்றனர். தாயின் காலில் பணிபவன் பல ஆலயங்களுக்கு செல்வதற்கு சமம். தெய்வீகத் தன்மைகொண்ட கண்கண்ட ஒரே தெய்வம் தாய்.

A. கலைக்காந்தன் தரம்-10[B], கொ/மு/இ/கல்., கொழும்பு-15.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சக்திதரும் பால்







உலகில் பொதுவாக அனைத்து மக்களுமே எவ்வித பாகுபாடுமின்றி அருந்தும் ஓர் உணவுப் பதார்த்தம் பால் என்று கூறலாம். குறிப்பாக பசும்பால் உலகமக்கள் அனைவராலுமே அருந்தப்படுகின்றது. தாய்ப்பால் நன்கு சுரக்காத நிலை ஏற்படும்போது, குழந்தைகளுக்கு பசும்பால் ஊட்டப்படுகின்றது. வயது முதிர்ந்தோர் ஊட்டச்சத்தை விரைவில் பெற்றுக்கொள்வதற்கு பசும்பாலையே அருந்துகின்றனர். பொதுவாக, பாலில் 85% நீர் அடங்கியுள்ளது.

தாய்ப்பாலானது உலகில் மற்றைய ஜீவராசிகளுக்கும் உரியது. அவை தமது இளமைக்காலத்தில் தமது தாயிடம் பாலை அருந்துகின்றன. அத்துடன், தாய்ப்பால் அருந்தாத மனிதர்கள் உலகில் குறைவு என்றும் கூறலாம்.

பசும்பால் புத்துணர்வு தரக்கூடியது. உடல் பலத்தையும், சிந்தனை சக்தியையும் இதனை அருந்துவதன்மூலம் பெற முடிகின்றது. பசுவின் ஆகாரம் தாவரங்களாக இருப்பதால் பசும்பாலானது தாவரங்களின் உயிர்ச்சத்தாகவும் கொள்ளப்படுகின்றது. இது தாவரக் கொழுப்பு, நீர்ப்புரதம், சர்க்கரை, விட்டமின் B, கல்சியம், பஸ்பரஸ் ஒருசேரக் கலந்த சக்திமிகு திரவமாகும்.

வர்த்தக ரீதியாகப் பதப்படுத்திய பசும்பாலில் விட்டமின் -A யும், -D யும் செறிவூட்டப்படுகின்றன. பசும்பால் இனிமையாகவும், உடலுக்கு குளிர்ச்சியைத் தரக்கூடியதுமாக இருந்தபோதிலும் அது எளிதில் ஜீரணமாவதில்லை என்றும் கூறப்படுகின்றது.

இப் பால் கெட்டுப்போகக் காரணம் அதிலுள்ள சர்க்கரையை காற்றிலுள்ள நுண்ணிய பக்டீரியாக்கள் உண்டுவிடுவதே என்பதை லூயிஸ் பாஸ்டர் கண்டறிந்தார் அதனால், இச்செயல்முறை பாஸ்டரைஷேசன் (Basterisation) என்றழைக்கப்படுகின்றது. பதப்படுத்தப்படுகின்ற பால் 'பாஸ்டரைசேஷன்' முறையில் பக்டீரியா நீக்கப்படுவதால் குளிரூட்டப்படும் பொழுது புளித்தல், திரிதல் ஏற்படுவதில்லை.

பாலிலிருந்து வெண்ணெய், தயிர், பாலாடை என்பன தயாரிக்கப்படுகின்றன. பாலாடைகள் கி.மு. 3200 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டதாக வரலாற்றுத் தகவல்கள் கூறுகின்றன. கி.பி.1851 லேயே பெருமளவில் மக்கள் பாலாடையைப் பயன்படுத்தியுள்ளதாக அறிய முடிகின்றது.

பசும்பால் தவிர, வெள்ளாட்டுப்பால், செம்மறியாட்டுப்பால், எருமைப்பால், ஒட்டகப் பால் போன்றனவும் மக்களால் விரும்பப்படுபவைகளாகும்.

எருமைப்பால் அதிக கொழுப்பு நிறைந்தது. எருமைப்பாலிலிருந்து தயாரிக்கப்படும் தயிர் அதிக சுவையானது.

எருமைப்பால், பசும்பாலை விடக் குளிர்ச்சியானதும் கூட. எருமைப்பாலில் அதிக கொழுப்புச்சத்துக் காணப்படுவதால், அதிகம் பசி எடுப்பவர்கள் இதனை அருந்தலாம். எருமைப்பாலும் ஜீரணிக்கத் தாமதமாகும் என்பதால் ஜீரணக் கோளாறு உள்ளவர்கள் இதனை உண்பதைத் தவிர்த்துக்கொள்வது நலம்.

ஆட்டுப்பால் விரைவில் ஜீரணிக்கக்கூடியதும், அதிக சத்துக்கள் நிறைந்ததுமாகும். பாலூட்டும் தாய்மார்கள் ஆட்டுப் பால் அருந்துவதனால், அதிக பால் சுரக்கும் என்றும் கூறப்படுகின்றது. இருமல், மூச்சுத்திணறல் உள்ளவர்களுக்கு ஆட்டுப்பால் உகந்ததாகக் கொள்ளப்படுகின்றது. நோயாளர்கள் விரைவில் ஊட்டச்சத்துப் பெற்றுக்கொள்வதற்காக ஆட்டுப்பாலை வைத்தியர்கள் சிபாரிசு செய்கின்றனர்.

ஒட்டகப்பாலானது மிக ருசியானது. அதிக இனிப்பானதும் கூட. இது விரைவில் கட்டியாகிவிடுவதால் இதனை உபயோகித்து, பால்தேனீர், பால்கோப்பி என்பன தயாரிக்கப்படுவதில்லை. அத்துடன், ஒட்டகத்திலிருந்து ஒரு நாளைக்கு 18 லீற்றர் வரை பாலைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

செம்மைத்துளியான்

# விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 4053

கே.எஸ். ஞானதீபன், தரம்-3, நீர்/விஜயரட்ணம் இ.ம.கல்., நீர்கொழும்பு.


அங்.இல: 4054

என்.பாத்திமா ருக்ஷி, தரம்-3, தி/ஆயிஷா ம.ம.வித்., கந்தளாய்.


அங்.இல: 4055

எஸ்.டி.எம்.அர்ஷாத், தரம்-6, நிக/அல் இல்மியா மு.ம.வித்.,பொரலுவெவ.


அங்.இல: 4056

சு.தபோஜினி, தரம்-7C, கிளிநொச்சி இந்.கல்., கிளிநொச்சி.


அங்.இல: 4057

கே.தர்மிஷா, தரம்-9, வ/இ.ம.ம.வித்., யாழ் வீதி, வவுனியா.


அங்.இல: 4058

என்.விதோஷன், தரம்-8, நீர்/விஜயரட்ணம் இ.ம.கல்., நீர்கொழும்பு.


அங்.இல: 4059

ம.அனுஷா, தரம்-9A, யா/இளவாலை த.ம.வித்., இளவாலை.


அங்.இல: 4060

எம்.ஆர்.எம்.தய்யான், தரம்-9, குப்பியாவத்தை தே.கல்., நெத்தலிமட.


அங்.இல: 4061

எம்.ஐ.எவ்.ருஷ்தா, தரம்-9T, புனித அந்தோனியார் பெ.கல்., கண்டி.


அங்.இல: 4062

எம்.எஸ்.பாத்திமா றிப்தா, தரம் 10, தி/பாத்திமா பா.ம.வித்., முள்ளிப்பொத்தானை.


அங்.இல: 4063

எம்.திவாகினி, தரம்-11, யா/இணுவில் ம.கல்., இணுவில்.


அங்.இல: 4064

என்.எவ்.வஜீஹா, தரம்-11A, சாஹிரா தே.கல்., அநுராதபுரம்.

## சாதனையாளர்

# ஆந்த்ரேமரீ அம்பியர் (1775-1836) மின்காந்த தத்துவம்

மின்காந்த தத்துவங்களை வடிவமைத்து மனித சமுதாயத்திற்கு மாபெரும் சேவையாற்றியவர் தான் ஆந்த்ரேமரீ அம்பியார்.

இரும்பு, காந்தக் கட்டைகள் எதுவும் இல்லாமல் மின்சாரத்தின் உதவியால் செயற்கைக் காந்தத்தை உருவாக்க முடியும் என்பதை முதன்முதலாக கணித முறைப்படி, மிக அற்புதமாக விளக்கியவரும் மின்காந்தத் தத்துவங்களை வடிவமைத்தவரும் இவரேயாவார்.



இவர் 1775 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 22 ஆம் திகதி பிரான்ஸ் நாட்டின் லையன்ஸ் என்ற நகரில் பிறந்தார். இவரது தந்தை ஒரு சாதாரண சணல் வியாபாரி. எனினும், அறிவுத் திறன் மிக்கவர். தனது அறிவுத் திறனை சிறுவயதில் இருந்தே மகனுக்கு கற்பித்து வந்தார். அதனால், தனது பதினோராவது வயதில் இலத்தீன் மொழியில் புலமை பெற்றதோடு கணிதம், விஞ்ஞானத்திலும் உரிய தேர்ச்சி பெற்றார்.

தான் சந்தித்த பல துன்பங்களில் இருந்து மீள்வதற்காக, பொழுது முழுவதையும் விஞ்ஞான ஆய்வில் செலவிட்டார். கணித இயல் தத்துவம் ஒன்றைப் பற்றிய கட்டுரையை இவர் வெளியிட்டபோதுதான் விஞ்ஞானிகளுக்கும் கணித விற்பன்னர்களுக்கும் முதன் முதலாக அம்பியர் அறிமுகமானார்.

1827 இல் இவர் மின்சாரத்தைப் பற்றியும் காந்தத்தைப் பற்றியும் எழுதி வெளியிட்ட நூல் உலக அளவில் புகழ்பெற்றது. நிலைத்த காந்தத்தில் உள்ள காந்த சக்திக்கு அப்பொருளின் மூலக்கூறுகளில் உள்ள மின்சாரமே காரணம் என்பதும் காந்தம் என்பது மின்னோட்டம் சார்ந்ததுதான் என்பதும் இவரது ஆராய்ச்சியின் முடிவுகளாகும்.

ஒரு கடத்தியின் (கம்பியின்) மூலம் மின்னோட்டம் நடக்கும்போது, அக்கம்பியைச் சுற்றி காந்த சக்தி வட்டவடிவில் பரவி இருக்கிறது என்றும் பின்பு நேர் வரிசையாக வைக்கப்பட்ட இரண்டு கம்பிகளில் ஒரே திசையில் மின்னோட்டம் நிகழும்போது,அக்கம்பிகள், ஒன்றையொன்று ஈர்ப்பதையும் அதற்கு மாறாக அக்கம்பிகளில் எதிரும் புதிருமாக மின்னோட்டம் பாயும்போது, அந்த இரு கம்பிகளும் ஒன்றை ஒன்று விலக்கி நிற்பதையும் அம்பியர் கண்டுபிடித்தார். இந்த மின்னோட்ட தத்துவத்திற்குப் 'நீச்சல் விதி' என அம்பியர் பெயர் சூட்டினார்.

அதன் பின் அம்பியர் வேறு ஒரு முறையையும் கையாண்டார். மின்னோட்டம் பாயும் கம்பிச் சுருளின் மையத்தில் சாதாரண இரும்புக்குப் பதிலாக எஃகு இரும்பை வைத்து மின் இணைப்பைக் கொடுத்தார். எஃகு இரும்போ மின்சாரத்தின் மூலம் தான் பெற்ற காந்த சக்தியை இழக்கவில்லை. இது மின்சார வரலாற்றில் மாபெரும் கண்டுபிடிப்பாகும்.

சாதாரண இரும்பை, மின் சுருளின் மையத்தில் வைத்து மின் இணைப்பைக் கொடுத்து உண்டான காந்தத்துக்கு தற்காலிக காந்தம் என்றும் எஃகு இரும்பை மின்சுருளின் மையத்தில் வைத்து மின் இணைப்பைக் கொடுத்தபோது, உண்டான காந்தத்துக்கு 'நிலைத்த காந்தம்' என்றும் பெயர் சூட்டினார். மின்சக்தி பற்றியும் காந்த சக்தி பற்றியும் மகத்தான பல கண்டுபிடிப்புகளைச் செய்து உலகிற்கு வழங்கிய அம்பியர் தன் வாழ்நாட்களில் எந்தவித சுகத்தையும் அனுபவிக்கவில்லை. 1836 இல் மறைந்த இவரின் நினைவாகவும் இவரைக் கௌரவிக்கும் முகமாகவும் ஒரு கடத்தியால் ஓடிவரும் மின்சாரத்தை அளக்கும் அலகுக்கு 'அம்பியர்' எனும் பெயர் சூட்டப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




கொழும்பு முஸ்லிம் கல்வி முன்னேற்றச் சங்கம் (MEPS) ஏற்பாடு செய்திருந்த 2009 க.பொ.த. சா/தரப் பரீட்சையில் ஒன்பது பாடங்களிலும் A தரச் சித்தி பெற்ற மாணவர்களுக்கு பணப்பரிசு, சான்றிதழ் வழங்கல் மற்றும் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கும் விழா அண்மையில் MEPS அமைப்பின் தலைவர் எம்.இஸட். அஹமத் முனவ்வர் தலைமையில் நடைபெற்றது. விழாவில் கலந்துகொண்ட அதிதிகளையும் A தரச் சித்தி பெற்ற மாணவர்கள் சிலரையும் படங்களில் காணலாம்.

## விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



கட்டுகஸ்தோட்டை புனித அன்தோனியார் கல்லூரியின் தமிழ் மன்றம் ஏற்பாடு செய்த 41 ஆவது வருட கலைவிழா, அண்மையில் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. கலை விழாவின்போது, மேடையேறிய மாணவர்களின் கலைநிகழ்வொன்றைப் படத்தில் காணலாம்.

*(தகவல்: எம்.ஆஷிக்)*



ஹெம்மாதகம-வாடியதன்னையைச் சேர்ந்த சியாம்-ஷரீபா ஜஹான் தம்பதியரின் செல்வப் புதல்வன் முஸ்தாக் அஹமட், 22.03.2011 அன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.



*கண்டியைச் சேர்ந்த இஸ்மாயில்- மிஸ்ரியா தம்பதியரின் செல்வப் புதல்வன் மிருஷான், 26.03.2011 அன்று தனது பதின்மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரை உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.*



கல்முனை அல்-பஹ்ரியா மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின்போது, மாணவி நுஹா பாடல் ஒன்றிற்கு நடனமாடுவதைப் படத்தில் காணலாம்.


*(தகவல்: நிப்றாஸ் மன்சூர்)*






ஒரு பொருள் அல்லது பொருட்கூட்டத்தின் தோற்றம் தூரத்திற்கு ஏற்ப வேறுபடும். உதாரணமாக, ஒரு பெட்டியை வரைவோம். அதனை வரையும் போது, இந்த உண்மையை நாம் விளங்கிக்கொள்ளலாம். இங்கு உண்மையான அளவுத்திட்டத்தைப் பேண முடியாது.

**பின்வரும் படத்தைக் கவனமாக அவதானியுங்கள்.**




I. இந்தப் படத்தில் 'அ' எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ள அனைத்துக் கோடுகளினதும் நீளம் சமமானது.

II. 'ஆ' எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ள கோடுகளின் நீளமும் சமமானது.

## தூரதரிசனம்

'தூரதரிசனம்' என்பது எமது கண்ணுக்குத் தெரியும் காட்சியாகும். அதாவது, ஒரு காட்சியை நோக்கும்போது, அருகில் மிகப் பெரியதாகவும் தூரம் செல்லச் செல்ல அது சிறிதாகச் செல்வதையும் அவதானிக்கலாம். இதனைத் தூர நோக்கில் எமது பார்வைக்குப் படும் ஆற்றல் எனலாம். இதனை நாம் எமது பார்வையின் 'மாயை' என்றும் கூறலாம்.

நேராக உள்ள புகையிரதப்பாதை வீதிகள், மின்கம்பங்கள், மாடி வீடுகள் போன்றவற்றை நோக்கும்போது, விசேட தன்மையொன்றை உணரலாம். உதாரணமாக, புகையிரதப்பாதை மிகத் தூரத்தில் ஒன்றிணைவதுபோல் தோன்றும். ஆனால், உண்மையில் புகையிரதப்பாதைகள் ஒன்றிணைவதில்லை. மாறாக, தூரத்திற்கமையவே, அவ்வாறு தோன்றுகின்றன. இதனையே 'தூரதரிசனம்' என்கிறோம்.

(தொடரும்)






எஃப்.அப்ரா, தரம்-9, தாருல் உலூம் ம.வித்., மாத்தறை.




கே.விஜேந்திரன், தரம்-6, கதிரேசன் த.ம.வித்., தெரணியகலை.



ஏ.டபிள்யூ.இர்பான், தரம்-$11^{C}$, அல்-ஹிஜ்ரா ம.வித்., முள்ளிப்பொத்தானை.



எம்.தில்சான், தரம்-$9^{J}$, அஸ்-ஸிராஜ் ம.வித்., அக்கரைப்பற்று-01.



எம்.எச்.ஹானியா, தரம்-4, கு/ஹமீதியா மு.ம.வித்., குருநாகல்.



சு.பங்கஜா, தரம்-$10^{A}$, விக்டோரியா கல்., சுழிபுரம்.



முஸ்னா இஸ்ஸத், தரம்-$2^{A}$, ஜெய்லானி தேசிய பாட., பலாங்கொடை.



ஸைனப் ரிஸ்னா, தரம்-8, ஸாஹிரா தே.கல்., ஹம்பாந்தோட்டை.



எம்.ஆகாஷ், தரம்-$7^{C}$, டி.எஸ்.சேனாநாயக்க கல்., கொழும்பு-07.



மு.ஹரிணி, தரம்-1, புனித சேவியர் ம.தே.கல்., மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் திருடன்?

பொன்னகரி என்ற ஊரியில் நந்தன் என்பவன் வாழ்ந்து வந்தான். அவன் மிகவும் வறிய நிலையில் இருந்தான். அதனால், தனது மூதாதையர்கள் விட்டுச்சென்ற ஒரு ஐம்பொன் சிலையை விற்றுப் பணமாக்கி ஜீவனம் நடத்தலாம் என எண்ணி நகரத்தை நோக்கிச் சென்றான்.

நகரத்தை நெருங்குகையில் இருட்டிவிடவே, ஒரு மடத்தின் திண்ணையில் சிலையைத் தலைக்கு அருகே வைத்தபடி உறங்க ஆரம்பித்தான். அப்போது அங்கு வந்த திருடன் ஒருவன் சிலையைத் திருடிக்கொண்டு ஓட முயன்றான்.

திடுக்கிட்டுக் கண் விழித்த நந்தன், 'குய்யோ முறையோ' எனக் கத்திக் கூச்சலிட்டான்.

இதனால், தெருவில் சென்ற, சிலர் திருடனைத் துரத்திப் பிடித்துக்கொண்டனர். இதனால், அங்கு கூட்டம் கூடியது.

''இந்தச் சிலை என்னுடையது'' என்றான் அவன்.

''இல்லை. இது என்னுடைய சிலை, இவன் பொய் சொல்கிறான்'' என்றான் நந்தன்.

விஷயம் அந்நாட்டு மன்னர் வரை போய்விட்டது. மன்னர் இருவரையும் அழைத்துவரும்படி காவலர்களுக்கு உத்தரவிட்டார். காவலர்கள் அவர்களை அரண்மனைக்குக் கொண்டு வந்தனர்.

மன்னர் அவர்களை விசாரணை செய்தார்.

''மன்னா..... இது எங்கள் பரம்பரைச் சொத்து'' என்றான் நந்தன்.

உண்மையானவனை சிலை ஒன்றும் செய்யாது. பொய் சொன்னவனை அது பழிவாங்கும். இன்று அந்த சிலை இங்கே ஓர் உயிர்ப்பலியை நிகழ்த்தப் போகிறது. நாம் தூங்காமல் கண் விழித்தபடி இருந்தால் அந்தக் காட்சியைக் காணலாம்'' என்றான்.
காவலர்கள் இருவரும் பேசிக்கொண்டிந்ததை சிறையில் அடைக்கப்பட்டிருந்த இருவருமே கேட்டனர். சிலை தன்னுடையது என பொய்யாக வாதிட்டவனுக்கு அப்போது உயிர்ப்பயம் ஏற்பட்டுவிட்டது

''இல்லை மன்னா.... இது எங்கள் வீட்டில் இருந்த சிலை. ஒருநாள் இரவு இவன் திருடிக் கொண்டு ஓடி விட்டான். நான் அவனைத் தேடி இப்போதுதான் அதைக் கண்டுபிடித்தேன்'' என்று அந்தத் திருடனும் வாதிட்டான்.

மன்னர் அந்த சிலையை நன்றாக உற்றுக் கவனித்தார். பின்னர் அவர்களிடம் கூறினார். ''நீங்கள் இருவரும் இதைத்



தங்களுக்குரியது என்று சொல்கிறீர்கள். அதனால், அதற்கு எவ்வித சாட்சியமோ, ஆதாரமோ அளிக்கப்படவில்லை. அதனால் இதை யாரிடம் கொடுப்பதென சற்றுக் குழப்பமாக உள்ளது. எனக்கு ஒருநாள் அவகாசம் கொடுங்கள். அதுவரையில் நீங்கள் இங்கேயே இருக்க வேண்டும். உங்களுக்காக ஒரு அறையை ஏற்பாடு செய்து தருகிறேன்'' என்றார்.

நந்தனும், திருடனும் ஒரே அறையில் அடைக்கப்பட்டனர்.

அன்றிரவு

அவர்கள் இருக்கும் அறைக்கு வெளியே இரு காவலாளிகள் காவலுக்கு நின்றனர். அவர்களில் ஒருவன் மிகுந்த கவலைப்படலானான். ''என்னப்பா சித்திரவேலு, ஏன் சோகமாக இருக்கிறாய்? யார் மீது உனக்கு அப்படிக் கவலை?'' என்று கேட்டான் ஒரு காவலாளி.

''இவர்களில் ஒருவன் திருடன் என்பது நாளை நிரூபணமாகிவிடும்'' என்றான் அடுத்த காவலாளி.

''மன்னர் எப்படி அதைக் கண்டுபிடிக்கப் போகிறார் கொஞ்சம் புரியும்படி சொல். இவர்கள்தான் இருவருமே சிலை தங்களுடையது என்று வாதிடுகிறார்களே?''

''அப்படிக் கேள். நம் மன்னர் மிகவும் புத்திசாலியாயிற்றே! வெளியூரில் இருந்து மாந்திரீகனை வரச்சொல்லி இருக்கிறார். அவன் சில மந்திர வேலைகள் செய்து சிலைக்கு உயிர் கொடுக்கப் போகிறான்.

அப்போது உண்மையானவனை சிலை ஒன்றும் செய்யாது. பொய் சொன்னவனை அது பழிவாங்கும். இன்று அந்த சிலை இங்கே ஓர் உயிர்ப்பலியை நிகழ்த்தப்போகிறது. நாம் தூங்காமல் கண் விழித்தபடி இருந்தால் அந்தக் காட்சியைக் காணலாம்'' என்றான்.

காவலர்கள் இருவரும் பேசிக்கொண்டிந்ததை சிறையில் அடைக்கப்பட்டிருந்த இருவருமே கேட்டனர். சிலை தன்னுடையது என பொய்யாக வாதிட்டவனுக்கு அப்போது உயிர்ப்பயம் ஏற்பட்டுவிட்டது.

''ஐயா..... என்னை மன்னித்துவிடுங்கள். நான்தான் சிலையின்மீது ஆசை வைத்து முட்டாள்தனமாக நடந்துகொண்டேன். மன்னரிடம் உண்மையை சொல்லி மந்திரப் பூஜையைத் தடுத்து நிறுத்துங்கள். என் உயிரைக் காப்பாற்றுங்கள்'' என்று கெஞ்சினான்.

மன்னரிடம் விடயம் தெரிவிக்கப்பட்டது. மன்னர் காவலாளிகள் மூலம் தாம் செய்த தந்திரம் பலித்ததையிட்டு மகிழ்ந்தார். இதன் பின் திருடன் சிறையில் அடைக்கப்பட்டான். நந்தனிடம் சிலை ஒப்படைக்கப்பட்டது.

# அணிலின் சூழ்ச்சி

அந்த அமைதியான காட்டின் ஒரு மரத்தில் ஒரு காகமும் குயிலும் நண்பர்களாக வாழ்ந்து வந்தன.

காகம் கூடு கட்டித் தனது குஞ்சு ஒன்றுடன் இருந்தது. ஆனால், குயில் மட்டும் காகம் கூடு கட்டி வாழுமாறு எவ்வளவோ அறிவுரை கூறியும் கேட்காமல் வாழ்ந்தது. இவ்வாறு இருக்க குயில் முட்டையிடும் வேளை வந்தது.

காகம் குயில் முட்டையிடத் தவிப்பதைக் கண்டு, ''என் கூட்டில் முட்டையை இடு. நான் பாதுகாக்கிறேன். இப்போதாவது உனக்குக் கூட்டின் அருமை புரிந்தால் சரி'' என்றது.

குயில் எதுவும் பேசாமல் காகத்தின்



கூட்டில் முட்டையை இட்டுவிட்டு, ''நண்பரே, மிக்க நன்றி. குஞ்சு பொரித்துப் பெரிதானதும் என்னுடன் அழைத்துச் செல்கிறேன். உன் எதிரில் இருக்க வெட்கமாக இருக்கிறது'' என்று கூறி பறந்து சென்றுவிட்டது.

காகத்தின் குஞ்சு, தான் தனியாக இருப்பதை நரகமாக நினைத்துக்கொண்டிருந்தது. எனவே, குயில் முட்டை பொரித்ததும் அந்தக் குஞ்சுடன் மிகவும் நட்புடன் இருந்தது. தனக்கு ஒரு சகோதரி கிடைத்தபெருமையில் மகிழ்ச்சி அடைந்தது.

காகமும் தன் குஞ்சுக்குத் துணை கிடைத்த மகிழ்ச்சியில் குயில் குஞ்சை தனது குஞ்சுபோல பாவித்து பாசத்தைக் கொட்டி வளர்த்தது.

அதே மரத்தின் அருகில் அணில் ஒன்று புதிதாக வந்து சேர்ந்தது. இரு குஞ்சுகளும் ஒற்றுமையாக, குதூகலமாக இருப்பதைக் கண்டு பொறாமைப்பட்டது. இரண்டையும் பிரிக்க சதித் திட்டம் தீட்டியது.

ஒருநாள் இரண்டு குஞ்சுகளையும் பிரிக்கும் நோக்கில் ''நண்பர்களே, நம் மூவர் குரலில் யார் குரல் இனிமையானது என்று நினைக்கிறீர்கள்?'' என்று கபடமாக அணில் தனது பேச்சைத் துவக்கியது.

காக்கை குஞ்சு, ''என்னுடையதுதான். இதில் என்ன ஐயம்? நான் காலையில் கரைவதால்தானே நம்மைச் சுற்றியுள்ள உயிரினங்கள் விழித்துக்கொள்கின்றன?'' என்றது.

குயில் குஞ்சு, '' என் குரல்தான் மிகவும் இனிமையானது. எங்கள் குரலைக் கேட்டு உலகமே மயங்குகிறது. புலவர்கள்கூட எங்கள் குரலைத்தான் உயர்வாகச் சொல்லியிருக்கிறார்கள்'' என்று தற்பெருமையில் நிதானம் இழந்து காகத்தின் குரலை இழிவாகப் பேசியது.

காகத்தின் குஞ்சுக்கும் குயிலின் குஞ்சுக்கும் அணில் சூடேற்றிச் சண்டையைப் பெரிதாக்கியது. இரண்டும் ஒன்றை ஒன்று கொத்தும் அளவுக்குச் சண்டை முற்றியதும், 'வந்த வேலை முடிந்துவிட்டது' என்று தன் இருப்பிடத்துக்குப் போய்விட்டது அணில்.

இரண்டும் இரு திசைகளில் சோகத்தோடு இருப்பதைக் கண்ட தாய் காகம் நடந்ததைக் கேட்டது. குயில் குஞ்சு நடந்ததைச் சொல்லி மன்னிப்புக் கேட்டது. ஆனால் காக்கைக் குஞ்சோ, 'உதிர்ந்த சிறகை எப்படி மீண்டும் ஒட்ட வைக்க முடியாதோ அப்படித்தான் நம் உறவையும் இனி ஒட்ட வைக்க முடியாது.இது இப்போதே கூட்டை விட்டுப் போக வேண்டும். இல்லை நான் போவேன்'' என்று முரண்டு பிடித்தது.

''என் செல்லமே, உன் சகோதரிக்கு இப்போதுதானே சிறகே முளைத்து வருகிறது? அதை விரட்டினால் அதனால் எப்படி வாழ முடியும்? நம்மை நம்பித்தானே அதன் அம்மா எம்மிடம் இதனை ஒப்படைத்துள்ளார்? கூடப் பிறந்தவர்களுக்குள் சண்டை ஏற்பட்டால் நிரந்தரமாகப் பிரிந்துவிடுகிறார்களா என்ன? நீங்கள் என் கண்கள் அல்லவா? நீங்கள் ஒன்றுபடாவிட்டால் நான் சாவதைத் தவிர வேறு வழியில்லை'' என்று அழுதது.

அதைக் கேட்ட காகத்தின் குஞ்சு, ''அம்மா, என்னை மன்னித்துவிடு. ஒவ்வொருவருக்கும் ஒரு சிறப்பு இருக்கிறது. அதை வைத்துச் சண்டை போட்டது எனது தப்பு. எனது தங்கையான குயிலை நான் இனிப் போகவிடமாட்டேன்'' என்று தன் சிறிய சிறகுகளால் அதை அணைத்துக்கொண்டது.

அதைக் கண்ட தாய் காகம் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்து இன்பக் கண்ணீரில் நனைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන්
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் 'எனது பூந்தோட்டம்' பற்றி ஒரு கட்டுரையை பார்ப்போம்.

### මගේ මල්වත්ත

1. මගේ ගෙදර මිදුලෙහි මල් වත්තක් තිබේ.
2. එය කුඩාය. නමුත් ලස්සනය.
3. එහි පාත්ති ගණනාවක් තිබේ.
4. සමහර පාත්ති රවුම්ය. සමහර එවා හතරැස්ය.තවත් සමහර ඒවා ත්‍රිකෝණාකාරය.
5. ඒවායේ මල් පැළ සිටුවා තිබේ.
6. සුදු,රතු,කහ,දම් පාට මල් එහි දකින්නට ලැබේ.
7. රෝසමල්, පිච්චමල්,වද මල් යන ඒවා අලංකාරය.

### மகே மல்வத்த

1. மகே கெதற மிதுலெஹி மல் வத்தக் திபே.
2. எய குடாய. நமுத் லஸ்ஸனய.
3. எஹி பாத்தி கணனாவக் திபே.
4. சமஹர பாத்தி ரவும்ய. சமஹர ஏவா ஹதரெஸ்ய. தவத் சமஹர ஏவா திரிகோணாகாரய.
5. ஏவாயே மல்பெல சிட்டுவா திபே
6. சுது, ரது, கஹ, தம் பா(ட்)ட மல் எஹி தகின்னட லெபே.
7. ரோச மல், பிச்ச மல், வத மல் யன ஏவா அலங்காரய.

### எனது பூந்தோட்டம்

1. எனது வீட்டு முற்றத்தில் ஒரு பூந்தோட்டம் இருக்கின்றது.
2. அது சிறியது. ஆனாலும், அழகானது.
3. அங்கே பல பாத்திகள் இருக்கின்றன.
4. சில பாத்திகள் வட்டவடிவிலானவை. சில பாத்திகள் சதுரமானவை. மேலும் சில பாத்திகள் முக்கோண வடிவமானவை.
5. அவற்றில் பூச்செடிகள் நடப்பட்டுள்ளன.
6. வெள்ளை, சிவப்பு, மஞ்சள், ஊதா நிறப்பூக்களை அங்கே காணலாம்.
7. ரோஜாப்பூ, மல்லிகைப்பூ, செவ்வரத்தம் பூ என்பன அழகானவை.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

i. எனது வீட்டுத் தோட்டத்தில் ஒரு பூந்தோட்டம் இருக்கின்றது.
..........................................................................

ii. அங்கே பல பாத்திகள் இருக்கின்றன.
..........................................................................

iii. சில பாத்திகள் முக்கோண வடிவமானவை.
..........................................................................



**இடைவெளிகளை நிரப்புக**

1. මගේ ගෙදර..........................................මල් වත්තක් තිබේ.
2. එහි....................................................ගණනාවක් තිබේ.
3. ඒවායේ....................................................සිටුවා තිබේ.
4. දම් පාට මල් එහි ..........................................ලැබේ.




✱ 'was' எனும் இறந்தகால துணை வினைச்சொல்லை, இறந்தகால எச்சவினையுடன் (Past Participle) சேர்த்து, உருவாக்கப்படும் வாக்கியம், செயற்பாட்டுவினை வாக்கியமாக அமைகின்றது என முன்னைய பாடத்தில் கற்றோம் அல்லவா?

✱ இவ்வாறாக அமையும் வாக்கியம், இறந்தகால தனி வாக்கியத்துக்குரிய, (Past Simple Tense) செயற்பாட்டு வினை வாக்கியம் என்பதையும் நாம் அறிவோம்.

✱ இனி அடுத்த பாடத்துக்குள் நுழைவோம். அதாவது, 'was' எனும் இறந்தகால துணை வினைச்சொல்லையும் '**being**' எனும் வினைச் சொல்லையும் அதனோடு, இறந்தகால எச்சவினையையும் (Past Participle) ஒன்று சேர்த்து, கையாண்டு அமைக்கப்படும் வாக்கியம், மற்றுமொரு செயற்பாட்டுவினை வாக்கியமாக (Passive Voice ) அமைகின்றது.

✱ இவ்வாறு அமைகின்ற செயற்பாட்டு வினை வாக்கியம், இறந்தகால தொடர் வாக்கியத்தில் (Past Continuous Tense) காணப்படுகின்ற,செய்வினை (Active Voice) வாக்கியத்துக்குரிய செயற்பாட்டு வினை (Passive Voice) வாக்கியம் என்பதை நாம் ஞாபகத்தில்கொள்ள வேண்டும். உதாரணங்கள் மூலம் அவற்றை இங்கே அவதானிப்போம்.

(அ) நான் அந்த வேலையை செய்துகொண்டு இருந்தேன்.
I was doing that work.
(இறந்தகால தொடர் வாக்கியம்- செய்வினை)
(Active Voice of the Past Continuou Tense)

(ஆ) அந்த வேலை என்னால் செய்யப்பட்டுக்கொண்டிருந்தது.
That work was being done by me.
(இறந்தகால தொடர் வாக்கியம்- செயற்பாட்டு வினை)
(Passive Voice of the Past Continuous Tense)

**குறிப்பு:** இங்கே, was being done எனும் மூன்று வினைச்சொற்களையும் ஒரு கூட்டு வினைச் சொல்லாகவே கருத வேண்டும். இதற்கு, 'செய்யப்பட்டுக்கொண்டிருந்தது' என அர்த்தம் கொள்ளலாம்.

(இ) அவன் இந்தப் படத்தை வரைந்துகொண்டு இருந்தான்.
He was drawing this picture.
(இறந்தகால தொடர் வாக்கியம்- செய்வினை)
(Active Voice of the Past Continuous Tense)

(ஈ) இந்தப் படம் அவனால் வரையப்பட்டுக்கொண்டிருந்தது.
This picture was being drawn by him.
(இறந்தகால தொடர் வாக்கியம்- செயற்பாட்டு வினை)
(Passive Voice of the Past continuous Tense)

✱ ✱ ✱

(உ) அவள் இந்தக் கடிதத்தை எழுதிக்கொண்டு இருந்தாள்.
She was writing this letter.
(இறந்தகால தொடர் வாக்கியம்- செய்வினை)
(Active Voice of the Past Continuous Tense)

(ஊ) இந்தக் கடிதம் அவளால் எழுதப்பட்டுக்கொண்டிருந்தது.
This letter was being written by her.
(இறந்தகால தொடர் வாக்கியம்- செயற்பாட்டு வினை)
(Passive Voice of the Past Continuous Tense)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# ஜப்பானைத் தாக்கிய பாரிய பூமியதிர்ச்சி






ஜப்பானுக்கு அருகாமையில் கடற்பகுதியில் ஏற்பட்ட பாரிய பூமியதிர்ச்சியின் காரணமாக, ஏற்பட்ட கடற்கோள் (சுனாமி) தாக்கத்தினால் ஆயிரக்கணக்கானோர் மரணமடைந்தும் ஏராளமானோர் காணாமல்போயும் உள்ளனர்.

மேற்படி பூமியதிர்ச்சியினாலும் சுனாமியினாலும் கட்டடங்கள் பலவும் பாரிய அளவில் இடிந்து வீழ்ந்ததுடன் ஏராளமான சொத்து அழிவுகளும் ஏற்பட்டுள்ளன.

ஜப்பானின் 'சென்டாய்' நகரிலிருந்து 80 கி.மீற்றர் தூரத்திலுள்ள கடல் பரப்பில் 8.9 ரிக்டர் அளவில் ஏற்பட்ட இந்தப் பூமியதிர்ச்சியினால், சிறிய படகுகள், வாகனங்கள், பயணிகள் கப்பல்கள் என பலவும் கடல் நீரினால் அள்ளிச் செல்லப்பட்டன. பூமியதிர்ச்சியின் பின்னர் 19 சிறிய அதிர்வுகள் அடுத்தடுத்து நிகழ்ந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

140 வருடங்களின் பின்னர் ஜப்பானில் ஏற்பட்ட பாரிய பூமியதிர்ச்சி இதுவென்றும் குறிப்பிடப்படுகின்றது. ஜப்பானில் இதற்கு முன்னர் 1923 ஆம் ஆண்டில்தான் இவ்வாறான பாரிய பூமியதிர்ச்சியொன்று ஏற்பட்டிருந்தது. 'கன்டோ்' என்ற பிரதேசத்தில் 8.3 ரிச்டர் அளவில் ஏற்பட்ட அந்தப் பூமியதிர்ச்சியினால் ஒன்றரை லட்சம் பேர்வரை அப்போது மரணமடைந்திருந்தனர். இதன் பின்னர் 1996 ஆம் ஆண்டில் 'தோபே' என்ற நகரில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியினால் 6,400 பேர் மரணமடைந்திருந்தனர்.

இம்முறை ஏற்பட்ட பூமியதிர்ச்சி, சுனாமி குறித்து மக்களுக்கு முன்கூட்டியே எச்சரிக்கை செய்யப்பட்டதாலேயே மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை முன்னைய காலங்களைவிட, குறைவடைந்திருப்பதாகவும் செய்திகள் சுட்டிக்காட்டுகின்றன.

## அற்லஸ் கேள்வி - 300

**கேள்வி:** ஜப்பானில் எத்தனை அணுமின் நிலையங்கள் உள்ளன?

சரியான விடை.......................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 300,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 298 இன் சரியான விடை: 41 வருடங்கள்**

**பரிசு பெறுவோர்**

கே.வுதுஷா,
மே/பா கனகசபாபதி,
281, ஏ.வி.டி.கட்டடம், பிரதான வீதி, டிக்கோயா.

நாராயணன்,
14, சாகர வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு-04.

யா.மதுர்ஷன்,
199/5, சூசைப்பிள்ளையார் குளம், வவுனியா

# ஜப்பானை அச்சுறுத்தும் அணு உலை ஆபத்து!

### 1900 ஆம் ஆண்டின் பின்னர் உலகில் ஏற்பட்ட பாரிய பூமியதிர்ச்சிகள்




ஜப்பானில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியின் காரணமாக, அங்குள்ள அணு உலைகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன், அவற்றில் ஏற்படக்கூடிய கசிவுகளின் மூலம் பாரிய சேதங்கள், அழிவுகள் ஏற்பட்டுள்ளன. இனிவரும் நாட்களில் இந்த அணு உலையில் மேலும் வெடிப்புக்கள் ஏற்பட்டால் பூமியதிர்ச்சி, சுனாமி ஆகியவற்றையும் விட, பல மடங்கு அழிவுகள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாகவும் இது அணுகுண்டின் வெடிப்பிற்கு சமமானதாக இருக்கும் என்று அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

ஏற்கனவே, இந்த அணு ஆலையில் ஐதரசன் வாயுவின் கசிவு ஏற்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது. ஃபுர்குஷிமா 1, ஃபுர்குஷிமா 2 எனப்படும் அணு உலைகளிலேயே அனர்த்தங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

ஜப்பானில் மின்சார உற்பத்தியில் 30 வீதமான மின்சாரம் அணு மின் நிலையங்களிலிருந்தே பெறப்படுகின்றது. 50 அணு உலைகளைக் கொண்டுள்ள ஜப்பானில் 11 அணு உலைகள் பூமியதிர்ச்சியும், சுனாமியும் ஏற்பட்ட பகுதிகளில் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# தெரிந்து கொள்வோம்



* நியுஸிலாந்தின் தலைநகர் எது?
  **வெலிங்டன்**



* 2010 ஆம் ஆண்டில் தெரிவான ஜப்பானிய பிரதமர் யார்?
  **நா ஒட்டாக்கான்**
* 'போல்க்கன்' நாடுகள் என அழைக்கப்படும் நாடுகள் எவை?



  i. **இத்தாலி** ii. **அல்பேனியா**
  iii. **செகொஸ்லேவேகியா**
* மழைமானி எதற்குப் பயன்படுகின்றது?
  **குறித்த இடத்தில் 24 மணி நேரத்தில் கிடைக்கப்பெற்ற மழையின் அளவைக் கணிக்கப் பயன்படுத்தப்படுகின்றது.**



* வெள்ளை நிறமான முட்டைகளை இடும் பிராணிகள் எவை?
  **பல்லி, புறா, கிளி, ஆமை, ஓணான்**



* அரங்கேற்றம் என்றால் என்ன?
  **நாடகம், நடனம் போன்ற கலை நிகழ்ச்சிகளைப் பழகி அதனை முதன்முதலில் மேடையேற்றுவது.**



* ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் எத்தனை வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறுகின்றது?
  **4 வருடங்களுக்கு ஒரு முறை.**
* யாழ்ப்பாண மன்னர் காலத்தில் அரசகேசரி எனும் புலவர் வாழ்ந்தார். அவர் இயற்றிய முக்கியமான நூல் எது?
  **இரகுவம்சம். காளிதாச இரகுவம்சத்தை விட இந்நூல் சிறப்பானது.**
* பன்றிக் காய்ச்சலைப் பரப்பும் வைரஸ்கள் எவை?
  **AH1, N1**



* காடுகளை உருவாக்க முடியாத மரங்கள் என அழைக்கப்படும் மரம் எது?
  **யுகாலிப்டஸ் மரங்கள்.**



* இலங்கையின் உயரமான நீர் வீழ்ச்சி எது?
  **பம்பரகந்த**
* இலங்கையின் தேசிய மலர் எது?
  **நீல அல்லி**
* 'ஹன்சார்ட்' என்றால் என்ன?
  **நாடாளுமன்றத்தில் அங்கத்தவர்களால் ஆற்றப்படும் உரைகளைப் பதிவு செய்வது.**

**தொகுப்பு-உடுவை பரந்தாமன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயர்லாந்து-ஸ்கொட்லாந்து அணிகளுடன் இலங்கை அணி போட்டியிடவுள்ளது

சர்வதேச கிரிக்கெட் சபையில் நிரந்தர உறுப்புரிமையை இன்னும் பெற்றிராத அயர்லாந்து, மற்றும் ஸ்கொட்லாந்து அணிகளுக்கு ஊக்கமளிக்கு முகமாக அந்த அணிகளுடன் இரண்டு ஒருநாள் போட்டிகளில் கலந்துகொள்வதற்கு இலங்கை கிரிக்கெட் அணி முன்வந்துள்ளது.

மேற்படி போட்டிகள் ஜூலை மாதம் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கு முன்னதாக 3 டெஸ்ட் போட்டிகளி லும், ஒரு டுவென்டி டுவென்டி போட்டியிலும், 5 ஒருநாள் போட்டிகளிலும் கலந்து கொள்வதற்கென இலங்கை அணி மே மாதம் நடுப்பகுதியில் இங்கிலாந்திற்கு செல்லவுள்ளது. இதில் டெஸ்ட் போட்டி மே மாதம் 26 ஆம் திகதி ஆரம்பமாவதுடன், டுவென்டி டுவென்டி போட்டி ஜூன் மாதம் 25 ஆம் திகதியும் நடைபெறும்.






இதனை அடுத்து ஒருநாள் போட்டித் தொடர் ஆரம்பமாகும். இப்போட்டித் தொடர் முடிவடைந்ததும் ஜூலை மாதம் 11 ஆம் திகதி அயர்லாந்துடனும், ஜூலை 13 ஆம் திகதி ஸ்கொட்லாந்துடனும் இலங்கை அணி போட்டியிடும். இந்தப் போட்டிகள் அனைத்தும் முடிவடைந்து இலங்கை அணி நாடு திரும்பியதும், அவுஸ்திரேலிய அணி இலங்கைக்கு விஜயம் செய்யும். இதில் 3 டெஸ்ட் போட்டியிலும், 5 ஒருநாள் போட்டிகளிலும் அவுஸ்திரேலிய அணி இலங்கை அணியுடன் போட்டியிடும்.

## மீண்டும் வெற்றியை கோட்டைவிட்ட டோனி!

உலகக் கிண்ண முதல் சுற்றுப் போட்டிகளில் இந்திய அணி தென்னாபிரிக்கா அணியிடம் தோல்வி அடைந்தமை குறித்த விமர்சனங்கள் தற்போதும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. ஏற்கனவே இங்கிலாந்துக்கு எதிரான போட்டியிலும் ஓட்ட எண்ணிக்கை சமநிலையில் முடிவடைந்து போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தமைக்கு இந்திய அணி மீது பலத்த விமர்சனங்கள் எழுந்திருந்தன.

எப்போதும் போட்டியின் இறுதிக் கட்டத்தில் ஏற்படுகின்ற 'டென்ஷனுக்கு' இந்திய அணி பலியாகி விடுவதுண்டு என்று 'விஜய்' யில் நாம் குறிப்பிட்டிருந்தோம். இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் மட்டுமன்றி தென்னாபிரிக்காவிற்கு எதிரான போட்டியிலும் அதுவே நடைபெற்றுள்ளது. கடைசி ஓவரின் போதும் வெற்றியானது இரண்டு அணிகளுக்கும் சமனான நிலையிலேயே இருந்தது. இந்த சந்தர்ப்பத்தில் இந்திய அணியின் தலைவர் டோனி தவறான அணுகுமுறையொன்றைக் கையாண்டார். அதாவது, இறுதி ஓவரை வீசுவதற்கு நெஹ்ராவை அழைப்பதை விட, ஹர்பஜன் சிங்கை அழைத்திருந்தால் போட்டியின் முடிவு வேறு விதமாக மாறியிருக்கக் கூடும். நெஹ்ரானின் சமயோசிதமற்ற பந்துவீச்சினால்தான் எதிரணிக்கு அதிக ஓட்டங்களை எடுக்க முடிந்தது. டோனியின் தவறான முடிவு குறித்து போட்டி வர்ணனையாளர் ரவிசாத்திரி தலைவர் டோனியிடம் கேட்டபோது;

நெஹ்ரா ஓர் அனுபவசாலி எனவும், அதிக எண்ணிக்கையான போட்டிகளில் கலந்துகொண்டுள்ளவர் என்றும், அதனால் தான் அவரை இறுதி ஓவரை வீசுவதற்கு அழைத்ததாக டோனி தனது தீர்மானத்தை நியாயப்படுத்திப் பேசினார்.

ஆனால், அணியின் தலைவர் என்ற வகையில் டோனி வேறு விதமாகச் சிந்தித்திருக்கவேண்டும். அதாவது அன்றைய போட்டியில் இறுதிப் பந்து ஓவரை நெஹ்ராதான் வீச வேண்டும் என்று போட்டி நடைபெறுவதற்கு முன்னர் திட்டமிட்டிருந்தாலும், போட்டிக் களத்தில் தற்போது சிறப்பாக விளையாடிக்கொண்டிருப்பவர்கள் யார் யார் என்ற ஒரு கணிப்பு டோனியிடம் இருந்திருக்க வேண்டும். அதன்படி அன்றைய போட்டியில் 49 ஓவர்களைக் கடந்த நிலையில் சிறப்பாக பந்துவீசியிருப்பவர் யார், மனோவியல் ரீதியில் பலமாக இருப்பவர் யார், எதிரணி துடுப்பாட்ட வீரருக்கு அச்சுறுத்தலாக இருப்பவர் யார் போன்றவற்றை டோனி கணித்திருக்க வேண்டும்.



அதன்படி ஹர்பஜன் சிங்தான் அன்றைய போட்டியில் வெகு சிறப்பாகப் பந்து வீசியிருந்தார். அதிலும் இக்கட்டான கடைசி ஓவரில் வேகப்பந்து வீச்சாளரைப் பயன்படுத்துவது ஆபத்தானது. காரணம் சிலவேளைகளில் வைட் பந்துகள் மூலம் ஓட்டங்கள் பெறப்படலாம். அதுமட்டுமன்றி துடுப்பு மட்டையில் பந்து உரசலாகப் பட்டாலே போதும் அது பவுண்டரியாகவோ, சிக்ஸராகவோ அமையக்கூடும்.

எனவே, இவற்றைக் கணித்து, சிறப்பாகப் பந்து வீசிக் கொண்டிருந்த ஹர்பஜன் சிங்கிற்கு இறுதி ஓவரை வழங்கியிருந்தால் போட்டி முடிவு இந்திய அணிக்கு சாதகமாக இருந்திருக்கலாம். எது எப்படியோ மற்றுமொரு தடவையும் இந்திய அணி உளவியல் ரீதியில் பலவீனப்பட்டு தனது வெற்றியை கோட்டைவிட்டுள்ளது.

## இந்தியாவின் உலகக் கிண்ண கனவு பலிக்காது



உலகக் கிண்ணத்தை வெல்வோம் என்ற இந்தியாவின் கனவு நிறைவேறாது என்று அவுஸ்திரேலியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரர் டீன் ஜோன்ஸ் தெரிவித்துள்ளார்.

போட்டிகள் ஆரம்பமாவதற்கு முன்னரே, உலகின் பலதிசைகளிலிருந்தும் பல்வேறான கணிப்புக்கள் வெளியாகியிருந்தன. அநேகமான கணிப்புகளில் இந்திய அணி கிண்ணத்தை கைப்பற்றக் கூடிய வாய்ப்பிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், முதல் சுற்றுப் போட்டிகளில் இந்திய அணி அடைந்த பின்னடைவுகளைப் பார்க்கையில் அந்த அணி பலவீனமான நிலையில் இருப்பதாகவே கருதப்படுகின்றது.

இத்தகைய பின்னணியிலேயே டீன்ஜோன்ஸும் தனது கருத்தைத் தெரிவித்துள்ளார். 'சச்சின், செவாக் ஆகிய இரண்டு பேர்களை மாத்திரமே நம்பிக்கொண்டு கிண்ணத்தை வெல்லலாம் என்று எண்ணினால் அது சாத்தியப்படப்போவதில்லை' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஒலிம்பிக் போட்டி டிக்கட் விண்ணப்பங்கள்

நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறுகின்ற சர்வதேச ஒலிம்பிக் போட்டிகள் அடுத்த வருடம் லண்டனில் நடைபெறவுள்ளமை ஏற்கனவே அறிவிக்கப்பட்டதாகும். இந்தப் போட்டிகள் தொடர்பான விபரங்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி, அடுத்த வருடம் நடைபெறவுள்ள 30 ஆவது ஒலிம்பிக் போட்டிகள் ஜூலை மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி வரை நடைபெறும். 26 வகையிலான போட்டிகள் இதில் இடம்பெறவுள்ளன.



போட்டிகள் அடுத்த வருடம் நடைபெறவுள்ள போதிலும் இந்த வருடமே போட்டிகளுக்கான டிக்கட்கள் விற்பனை செய்யப்படவுள்ளன. இதற்கமைய 8.8 மில்லியன் டிக்கட்களை விற்பனை செய்வதற்கு பிரிட்டன் ஒலிம்பிக் குழு ஏற்பாடுகளை செய்துள்ளது. டிக்கட்களுக்கான முன்பதிவு விண்ணப்பங்கள் ஏப்ரல் 26 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தங்கம் வென்ற மஞ்சுவுக்குத் தடை



தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்தைப் பாவித்தார் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ள இலங்கையின் குத்துச்சண்டை வீரர் மஞ்சு வன்னியாராச்சிக்கு கடந்த 16 ஆம் திகதி தொடக்கம் போட்டித் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் புதுடில்லியில் நடைபெற்ற 19 ஆவது பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் 56 கிலோ நிறை குத்துச்சண்டைப் போட்டியில் மஞ்சு தங்கப் பதக்கத்தை வெற்றி கொண்டிருந்தார். எனினும், ஊக்கமருந்து பாவித்ததாக அவர்மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. எனவே, அது தொடர்பான ஆய்வுகளுக்கு சமூகமளிக்குமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் ஆய்வுகளுக்கு முன்வரவில்லை. இவற்றை கவனத்தில் கொண்டே அவர்மீது தற்போது போட்டித்தடை விதிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# விண்வெளியை நோக்கி ஏரியேன் 5 ES ரொக்கெட்

ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தின் அதிக சக்தி வாய்ந்த 'ஏரியேன் 5 ES' எனும் ரொக்கெட், அண்மையில் பிரான்ஸ் நாட்டிலுள்ள கோரோ விண்வெளி மத்திய நிலையத்திலிருந்து வெற்றிகரமாக விண்வெளிக்கு அனுப்பப்பட்டது. இருபது தொன் நிறையுள்ள அத்தியாவசியப் பொருட்களை எடுத்துக்கொண்டு விண்ணில் உள்ள சர்வதேச விண்வெளி நிலையத்திற்கே இந்த ரொக்கெட் சென்றுள்ளது.

'ஏரியேன் 5 ES' ரொக்கெட்டானது, அது விண்வெளிக்கு ஏவுவதற்கென நிச்சயிக்கப்பட்ட தினத்தில் அனுப்பப்படவில்லை. மாறாக, குறிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு நாள் தாமதித்தே அதன் பயணம் ஆரம்பமாகியது. ரொக்கெட்டின் எரிபொருள் தொகுதியில் ஏற்பட்ட கோளாறின் காரணமாகவே, இந்தப் பயணத்தில் தாமதம் ஏற்பட்டது. எனினும், அது உடனே பழுதுபார்க்கப்பட்டு மறுதினமே ஏரியேன் 5 ES ரொக்கெட்டை விண்ணுக்கு ஏவ ஐரோப்பிய விண்வெளி நிறுவன அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுத்தனர்.

அமெரிக்காவிலுள்ள நாஸா விண்வெளி மையத்தின் விண்ணோடங்கள் யாவும் இவ்வருட இறுதியில் விண்வெளி ஆய்வுகளில் இருந்து ஓய்வு பெறவுள்ள நிலையில், அதன் பின்னர் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு பொருட்களையும் விண்வெளி வீரர்களையும் எடுத்துச்செல்ல இந்த 'ஏரியேன் 5 ES' ரொக்கெட்டே பயன்படுத்தப்படவுள்ளது.

# கட்டார் விஞ்ஞானிகள் கண்டுபிடித்த புதிய கிரகம்



கட்டார் நாட்டின் வானியல் விஞ்ஞானிகள் குழுவொன்று வாயுக்கள் நிறைந்த கிரகம் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளது. எமது ஞாயிற்றுத் தொகுதியில் 'வாயு ராட்சதன்' என்று கூறப்படுகின்ற வியாழன் கோளைவிட, பரப்பளவில் 20 சதவீதத்தால் விசாலமான இந்தப் புதிய கிரகமானது, புவியிலிருந்து 500 ஒளி வருடங்களுக்கு அப்பால் அமைந்துள்ளது.

இந்த புதிய கிரகத்திற்கு 'கட்டார் 1b' என பெயரிட்டுள்ளனர். ரோயல் வானியல் சங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள புதிய அறிக்கையிலேயே இது பற்றிய விபரங்கள் வெளியாகியுள்ளன. இம்முயற்சிக்கு கட்டார் கல்வி நிறுவகம் மற்றும் விஞ்ஞான, சமூக அபிவிருத்தி நிறுவனம் ஆகியன ஒத்துழைப்பை வழங்கியுள்ளன. கட்டார் விஞ்ஞானிகளின் இப்புதிய கண்டுபிடிப்பிற்கு அமெரிக்க மற்றும் பிரித்தானிய வானியலாளர்களின் ஒத்துழைப்பும் கிடைத்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கட்டார் விஞ்ஞானிகள் 'கட்டார் 1b' எனும் கிரகத்தைக் கண்டுபிடிப்பதற்கு அமெரிக்காவின் நியூமெக்ஸிகோவில் அமைக்கப்பட்டுள்ள தொலைக்காட்டியே உதவியுள்ளது.

# உயிர்வாழ உகந்த நிலையில் ஏராளமான கோள்கள்




நமது பால்வழித் தொகுதியில் புதன், வெள்ளி, பூமி போன்ற 5 ஆயிரம் கோடி கோள்கள் இருப்பதாக நாஸா விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இவற்றில் சுமார் 50 கோடி கோள்களில் மனிதர்கள் உயிர்வாழ உகந்த சூழ்நிலை நிலவுவதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். அமெரிக்க விண்வெளி ஆய்வு மையம் (நாஸா) அனுப்பிய 'கெப்லர்' விண்கலம் அனுப்பிய புகைப்படங்களை ஆராய்ந்ததை அடுத்தே, இத்தகவல்கள் தெரியவந்துள்ளன.




'கெப்லர்' விண்கலம் இதுவரை அனுப்பிய லட்சக்கணக்கான புகைப்படங்களை ஆராய்ந்ததில், 1,235 கோள்கள் மனிதர்கள் வாழ ஏற்றதாக இருக்கின்றன என்று தெரியவந்துள்ளது. அவற்றில் 54 கோள்களில் ஏற்கனவே மனிதர்கள் உட்பட ஏனைய உயிரினங்கள் இருந்திருக்கக்கூடும் என்றும் ஊகிக்கப்படுகின்றது.

# கெசினியின் ஆயுள் நீடிப்பு

சனிக் கிரகத்தின் தன்மை பற்றியும் அதன் துணைக் கோள்கள் பற்றியும் ஆராய்ச்சி செய்வதற்காக, கெசினி விண்கலத்தை நாஸா கடந்த 1997 ஆம் ஆண்டு விண்ணில் ஏவியது. ஏழு வருடங்கள் கழித்து, 2004 ஆம் ஆண்டில்தான் கெசினி சனிக்கிரகத்தைச் சென்றடைந்தது. பின்னர், அதில் இருந்து தனியே பிரிந்த Huygens விண்கலம், சனியின் மிகப் பெரிய துணைக் கோளான டைட்டனில் 2005 இல் தரையிறங்கியது.




கெசினியும் Huygensஉம் தங்கள் ஆய்வுப் பணியை தடங்கல்களின்றிச் செய்து வருவதால், அவற்றின் ஆயுள்காலம் நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த ஆய்வுக்கு Cassini Equinox Mission என்று தற்போது பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த இரு விண்கலங்களும் 2017 ஆம் ஆண்டு வரை பழுதடையாமல் செயற்படும் என நாஸா அறிவித்துள்ளது.



டைட்டனைச் சுற்றி வெண் மேகக்கூட்டங்கள் இருப்பது கெசினி விண்கலத்தின் அகச்சிவப்பு ஸ்பெக்ரோமீட்டர் மூலம் தற்போது தெரியவந்துள்ளது. இது பற்றி நாஸா விஞ்ஞானி ரொபர்ட் சாமுவேல்சன்; "டைட்டனின் வளிமண்டலத்தில் மித்தேன், ஈத்தேன் வாயுக்கள் அதிகம் இருக்கின்றன. அவைதான் வெண் மேகங்களை உருவாக்குவதாக ஏற்கனவே தெரிய வந்துள்ளது. அந்த மேகம் ஆவியானதும் அதில் இருந்து ஹைட்ரோகார்பன்களும் இதரஓர்கனிக் தனிமங்களும் தூசி போல தொடர்ச்சியாக டைட்டனில் படிக்கின்றன என்றும் தெரியவந்துள்ளது. இவ்வாறு வளிமண்டலத்தில் இருக்கும் மேகம் மற்றும் திவலைகளின் அளவு பற்றிக் தெரிந்தால் அவை எதனால் ஆக்கப்பட்டவை?, டைட்டனில் நீர் இருப்பதற்கான சாத்தியக்கூறு இருக்கிறதா? போன்ற கேள்விகளுக்கான விடைகளை உறுதியாகக் கண்டறிந்துவிடலாம்" என்று தெரிவித்துள்ளார். அத்துடன், டைட்டனைச் சுற்றிக் காணப்படும் இந்த வெண் மேகக்கூட்டங்கள், நமது பூமியைச் சுற்றி நீராவியால் உருவாகும் மேகங்கள் போலவே இருக்கின்றன என்றும் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2011.03.30ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 305**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**


## வழி காட்டுங்கள்

1



## சரியான எண்ணிக்கையில் வட்டமிடுக

2




## பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளியை நிரப்புக

4

1. அவர்கள் நேற்று..............................
(வந்தார்கள்/ வருவார்கள்)
2. ஜப்பானின் பல்வேறு பாகங்களில் நில அதிர்வு..............................
( உணரப்பட்டது/ உணரப்பட்டன)
3. தேர்தல் நிலவரம் குறித்து ஆராய பல குழுக்கள்..............................
( நியமிக்கப்பட்டனர்/ நியமிக்கப்பட்டன)

## இணைக்க

5

| | |
|---|---|
| 1. மலையும் மலைசார்ந்த இடமும் | 1. மருதம் |
| 2. காடும் காடுசார்ந்த இடமும் | 2. நெய்தல் |
| 3. வயலும் வயல்சார்ந்த இடமும் | 3. முல்லை |
| 4. கடலும் கடல் சார்ந்த இடமும் | 4. குறிஞ்சி |


## குழம்பியுள்ள சொற்களை ஒழுங்கமைக்க

3


| | |
|---|---|
| risset<br>sister | heftar<br>Father |
| napgrad<br>______ | hortreb<br>brother |
| ethrom<br>______ | dangram<br>______ |

## அறிவுக்கு விருந்து 302 விடைகள்

**போட்டி: 02**



**போட்டி: 03**




**போட்டி: 04**

1. ஆசனம் - இருக்கை/ கதிரை
2. சுவை- ருசி
3. வெட்கம் - நாணம்
4. தோழன் - நண்பன்/ சிநேகிதன்

**போட்டி: 05**

1. மாலைப்பொழுது - இரண்டுங்கெட்ட நேரம்
2. மிகவும் மகிழ்தல் - உச்சி குளிர்தல்
3. ஏமாற்றுதல் - காது குத்துதல்
4. உற்சாகப்படுத்தல் - தட்டிக்கொடுத்தல்

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 302 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
எஃப். ரிக்ஸா,
459, காலி வீதி, ஹொரேத்துடுவ.

**போட்டி: 02**
எஃப். இனாஷா,
1334, பாலையூற்று, திருகோணமலை.

**போட்டி: 03**
எஃப். முபீனா, 190B, மாதவன் வீதி, கல்முனை.

**போட்டி: 04**
வி.அனுஸ்யந்தன், 'விஜய வாசம்', சித்தங்கேணி.

**போட்டி: 05**
எம்.கோசிதா, 238, தெல்தோட்டை வீதி, கலஹா.

**பாராட்டுப் பெறுவோர்:**

* இஸ்றத் ஹின்பா, மருதமுனை-04.
* ஜே.பியோ ரொற்றியோ, வலப்பனை.
* எம்.சுஃப்வான், மஹவெல.
* என்.நவசால்னி, கல்லுள்ள.
* வி.அலன்சியா, நித்தியபுரி.
* என்.சதீலா, கிண்ணியா-03.
* ஆர்.தனுஹரன், சுண்டுக்குளி.
* எம்.முபீன், மெதகம.
* ஹஷீபா ஹஸன், ஹெம்மாதகம.
* ஆர்.சர்மிளாதேவி, ஹிந்தல.

## விஜய் வாசகர் மடல்

'டிஸ்கவரியின் இறுதிப் பயணம்', 'மாணவர் ஆக்கங்கள்', 'சிறுகதைகள்', 'தெரிந்துகொள்வோம்', 'ஆங்கிலம்-சிங்களம் கற்போம்', 'கணினித் தகவல்கள்' என்பன பிரமாதம். 'உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள்' எனும் ஆக்கம் காலத்தின் தேவையை உணர்ந்து பிரசுரிக்கப்பட்டிருந்தது. விஜய்யே! நீ நீண்டகாலம் வாழ்வதற்கு என் இனிய வாழ்த்துக்கள்.

**அல் ஹாஃபிழ் எம்.ஷஹீர்,**
**எம்.கே.ஹாஜி வீதி.,**
**செம்மண்ணோடை-07.**

உன்னில் பதிந்துள்ள தகவல்கள் அனைத்தும் எமக்கு மிகவும் பயனுள்ளதாக அமைகின்றன. 'facebook', 'விண்வெளித் தகவல்கள்', 'குடிசனக் கணக்கெடுப்பு', 'அந்தூரியம் பூ' போன்ற அபூர்வமான ஆக்கங்களை எமக்களித்தாய். மேலும், உன்னில் பிரசுரமாகின்ற புதிய தகவல்கள் எமக்கு மிகவும் பிரயோசனமாக இருக்கின்றன.

**எஸ்.ஆர்.பவணுஜா,**
**10B, பெரியபுலம்**
**ம.வித்.,யாழ்ப்பாணம்.**

எனக்கு மிகவும் பிடித்தது 'விண்வெளித் தகவல்கள்'







பகுதியாகும். நான் 2007 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை சகல தகவல்களையும் சேகரித்து வருகின்றேன். வெளியிடும் சில தகவல்களை வைத்து தனிப்பட்ட ரீதியில் பல ஆராச்சிகளை நடத்தி வெற்றியும் கண்டுள்ளேன்.

**எம்.ரிஜாத்,**
**அல்-அர்சத் வீதி., விளினையடி-01.**

நீ சுமந்து வரும் 'கற்றலுக்கான ஆலோசனைகள்' எனும் பகுதி கடந்த ஆண்டிறுதிப் பரீட்சையை சிறப்பாக எழுதுவதற்கு எனக்குக் கைகொடுத்தது. தவிர, 'தெரிந்து கொள்வோம்', 'விண்வெளித் தகவல்கள்' போன்றவை புவியியல் பாடப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற உதவின. 'வேப்பமரத்தடிப் பேய்', 'இராமாயணம்' போன்றவை ரசித்து வாசிக்கக்கூடியதாக இருக்கின்றன.

**யாஸ்மின் அத்தாஸ், தரம் - 11,**
**அலிகார் ம.வித்., கள்-எலிய.**

ஆண்டு எட்டில் காலடி வைத்த உனக்கு எனது பிறந்தநாள் வாழ்த்துக்கள். 'கடிகாரத்தின் கதை', 'யானை மீன்' மற்றும் ' அந்தூரியம் பூ' என்பன பற்றி பயனுள்ள தகவல்களை அறிந்துகொண்டேன்.

**எச்.எம்.அஸ்லம்,**
**ஹங்காணியார் வீதி,**
**ஓட்டமாவடி-01**

'சனத்தொகைக் கணக்கெடுப்பு', 'அந்தூரியம் பூ', 'பெரிய மீன்தொட்டி', 'உள்ளூராட்சி மன்றங்கள்' போன்ற ஆக்கங்கள் உட்பட, உன்னில் பிரசுரமாகியிருந்த அனைத்து ஆக்கங்களும் கல்விசார் விடயங்களுக்கு பெரிதும் துணை நின்றன. 'வேப்பமரத்தடிப் பேய்' தொடர்கதை முற்றுப்பெறுவது கவலையளிக்கிறது. இதேமாதிரியான இன்னொரு தொடர்கதையை உன் வாசகர்களுக்குப் பிரசுரிப்பாயா?

**எம்.சவுக்கத் அலி,**
**ஹிங்குல் ஓய, மாவனல்லை.**

'வேப்பமரத்தடிப் பேய்' தொடர்கதை மிகவும் சுவாரஸ்யமாக நகர்ந்தது. அது முற்றுப் பெறுவது வேதனைக்குரிய விடயமே! 'கணினித் தகவல்கள்', 'இராமாயணம்', 'வரலாற்றிலிருந்து' போன்ற பகுதிகள் பாடசாலைக் கல்விக்கு அதிகமான பயன்களை அள்ளித் தருகின்றன. நீ என்றும் நிலைக்க வேண்டும். எமக்குக் கல்வியைத் தொடராய் பொழிய வேண்டும்.

**வ.சோபிகா, பிரதான வீதி,**
**பலகொல்ல, கெங்கல்ல.**

விஜய்! என் உள்ளம் கவர்ந்த ஒரு பத்திரிகையாகும். நீ எனது உள்ளத்தில் குடிகொள்ளக் காரணம்; 'ஆங்கிலம்-சிங்களம் கற்போம்' என்ற பகுதிகளாகும். இவ்விரு மொழிகளிலும் என்னை அறிஞனாக்கிய 'விஜய்' பத்திரிகை மென்மேலும் வளர்ச்சிகண்டு என்றும் நிலைத்திருக்க இறைவனிடம் வேண்டுகிறேன்.

**கஸ்ஸாலி இஸ்ஸதீன்,**
**நாவலப்பிட்டி.**

**இந்த இதழில் (23.03.2011) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**
**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 30.03.2011.**

**அனுப்ப வேண்டிய முகவரி:** வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 ஆயிரம் வருடங்களுக்கு முன் வாழ்ந்த நாடோடிகளின் இருப்பிடங்கள்



8 ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் நாடோடி இனங்கள் வாழ்ந்த இருப்பிடங்கள் என நம்பப்படும் இடங்கள் உட்பட எட்டு புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதிகளை பாஜா கலிபோர்னியா தொல்பொருள் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த இடங்களில் வாழ்ந்த மக்கள் சிறு சிறு குழுக்களான நாடோடி இனங்கள் என்று தெரிய வருகிறது.

இவர்கள் மீன்பிடிப்பதற்காக மலைப் பகுதிகளிலிருந்து கடற்கரை வரை பயணம் செய்த நாடோடி இன குழுக்கள் என்றும் தெரிய வருகிறது.

இவர்கள் வாழ்ந்த குடியிருப்புக்கள் பெரும்பாலும் குகைகள், பாறைகள், மலைப்பகுதிகளில் அமைந்துள்ளன. இங்கு காணப்பட்ட ஆயுதங்கள் பெரும்பாலும் பாறைகள், கற்களால் ஆனவையாகும்.





இந்த கண்டுபிடிப்புகளின் மூலம் தற்போதைய பாஜா கலிபோர்னியா (Baja California) பற்றி மேலும் பல விடயங்களை அறியக்கூடியதாக இருக்குமென்று நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட ஏனைய பொருட்களாவன குழாய்கள், கல் அம்புகள், மட்பாண்ட பொருட்கள், நத்தை ஓடுகள், சிப்பிகள், சுறா, டொல்பின், மான் போன்றவற்றின் எலும்புக் கூடுகள் என்பனவாகும்.



# தெருவிளக்கிலும் படித்து மேதையான வித்யாசாகர்

தெருவிளக்கிலும் படித்து மேதையானவர் என்றவுடன் நமக்கு அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனைத்தான் நினைவுக்கு வரும். ஆனால், ஆபிரகாம் லிங்கன் மட்டுமல்ல; இன்னும் எத்தனையோ பேர் வீட்டில் விளக்கு எரிக்க எண்ணெய் இல்லாத காரணத்தால் தெருவிளக்கு வெளிச்சத்தில் படித்து மேதையாகி இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர்தான் வங்காளத்தின் [illegible]பெரிய கல்வி மான்களில் [illegible]வரான ஈஸ்வர சந்திர வித்யாசாகர்.



வித்யாசாகர் என்றால் அறிவுக்கடல் என்று பொருள்படுகிறது. உண்மையில் அவர் அறிவுக்கடல் மட்டுமல்ல; கருணைக் கடலுமாவார். பிறர் துன்பத்தில் மிகப் பெரிதாக மனம் வருந்துபவர்கள் கருணை உள்ளம் மிக்கவர்களே. அந்தவகையில் வித்யாசாகரின் உள்ளம் பொன்போன்றது என்கின்றனர். முழுமையான அன்பும் கருணையும் உடையவர்.

1820 ஆம் ஆண்டு பிறந்த வித்யாசாகர் ஒரு தத்துவஞானி, கல்விமான், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர் வெளியிட்டாளர். சீர்திருத்தவாதி, பரோபகாரி போன்ற பல சிறப்புகளைக் கொண்டவர்.

இவருடைய இளமைக்காலம் மிகுந்த வறுமையிலேயே கழிந்தது. வித்யாசாகர் மிகுந்த திறமையான மாணவர், எட்டு வயதில் பாடசாலைக்குச் செல்லும் வழியில் உள்ள மைல் கற்களில் உள்ள இலக்க வாசகங்களை மனனம் செய்தே ஆங்கில இலக்கங்களைக் கற்றாராம்.

மாணவப்பருவத்தில் இவர் தனக்குக் கிடைத்த புலமைப்பரிசில் உதவிகள் உணவு என்பனவற்றை ஏழைகளுக்கு கொடுத்து உதவியுள்ளார்.

இரக்ககுணம் மிக்க வித்யாசாகரின் வாழ்வில் நடந்ததாகக் கூறப்படும் சம்பவம் ஒன்று வருமாறு:

ஒரு சமயம் வித்யாசாகர் நாடகம் ஒன்றைப் பார்க்கச் சென்றிருந்தார். அந்த நாடகத்தில் வரும் கதாநாயகன், கதாநாயகியை மிகவும் கொடுமைப்படுத்துகிறான். கதாநாயகியை அடித்துத் துன்புறுத்துகின்றான்.

அந்தக் காட்சியைப் பார்த்து சகிக்க முடியாத வித்யாசாகர், மேடையில் ஏறி காலில் கிடந்த செருப்பைக் கழற்றி, கதாநாயகனை அடித்துவிட்டார். வித்யாசாகரின் இந்தச் செயலைப் பார்த்த அனைவரும் திகைத்துப் போனார்கள்.

ஆனால், கதாநாயகனாக நடித்தவர் மட்டும் வித்யாசாகரின் செருப்பை மார்போடு அணைத்துக்கொண்டு, அவரின் பாதங்களைத் தொட்டு வணங்கினார். பின்னர் நாடகம் பார்க்க வந்தவர்களைப் பார்த்து சொன்னார் ''என்னுடைய நடிப்புக்கு இதற்கு முன்னர் இவ்வளவு பெரிய வெகுமதி கிடைத்ததில்லை. வித்யாசாகர் என்ற பெரிய மேதை என்னுடைய நடிப்பில் இந்த அளவுக்கு கவரப்பட்டிருப்பார் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. அவருடைய செருப்பை எனக்குக் கிடைத்த மிகச் சிறந்த பரிசாகக் கருதுகிறேன். இதை என்னுடைய வாழ்நாள் முழுவதும் வைத்துப் போற்றுவேன்'' என்றார்.

சுயநினைவுக்கு வந்த வித்யாசாகர், ''நாடகம் அவ்வளவு தத்ரூபமாக இருந்தது. நாடகம் என்பதையும் மறந்து அவசரத்தில் செயற்பட்டுவிட்டேன்'' என்று மன்னிப்புக் கோரினார்.

இப்படி அவரின் இரக்க குணத்தைக் காட்டும் பல சம்பவங்கள் அவர் வாழ்வில் திகழ்ந்துள்ளன.



# செல்வமும் சாபமுமான யானைத்தந்தம்



யானையிடம் உள்ள பெரும் செல்வமாகவும்,அதேவேளை யானையின் அழிவுக்குக் காரணமாக இருக்கும் சாபக்கேடாகவும் யானைத் தந்தம் உள்ளது என்றே கூறவேண்டும்.



ஏனெனில், பெரும்பாலும் யானையின் அழிவுக்கு இந்தத் தந்தங்களே காரணமாக இருக்கின்றன. தந்தத்துக்காக ஏராளமான யானைகள் கொல்லப்பட்டுள்ளன. கொல்லப்பட்டும் வருகின்றன.

ஆபிரிக்க, மற்றும் ஆசிய யானைகளுக்கிடையில் உள்ள ஒரு முக்கிய வித்தியாசம் தந்தம்தான். ஆபிரிக்க யானைகளில் ஆண் மற்றும் பெண் யானைகள் எல்லாவற்றுக்கும் தந்தம் உள்ளது. ஆனால், ஆசிய யானைகளில் ஆண் யானைகளுக்கு மட்டுமே தந்தம் உள்ளது. ஆசிய யானைகளில் சுமார் 50 சதவீனமான பெண் யானைகளுக்கு கோரைப்பல் என்று கூறப்படும் குட்டையான தந்தங்கள் உள்ளன.

பெரும்பாலும் பிலியர்ட்ஸ் பந்துகள், பியானோ சுருதிக் கட்டைகள், கத்திப் பிடி போன்ற பல்வேறு பொருட்களின் தயாரிப்புக்கு தந்தங்களை பெறுவதற்காகவே யானைகள் கொல்லப்படுகின்றன.

புவியில் இன்று வாழும் உயிரினங்களில் மிகப் பெரிய உயிரினமான யானை இனத்தில் மூன்று இனங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. ஏனைய இனங்கள் அழிந்துபோய்விட்டன. எஞ்சியிருப்பவற்றையும் அழிப்பதில் சிலர் மும்முரமாக ஈடுபட்டிருப்பது கவலைக்குரிய விடயம்.

ஆபிரிக்க காட்டு யானை, ஆபிரிக்க யானை, ஆசிய யானை என்னும் இனங்களே தற்போது எஞ்சியிருப்பவை. யானையின் கர்ப்பகாலம் 22 மாதங்களாகும். புவியில் உள்ள உயிரினங்களில் இவ்வளவு நீண்ட கர்ப்பகாலமுடையது யானை மட்டுமே.

யானையின் ஆயுட்காலம் சுமார் 50 முதல் 70 வருடங்களாகும். மிகப் பெரிய யானை என்ற சிறப்பைப் பெற்ற யானை அங்கோலாவில் 1956 ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டது. இந்த யானை சுமார் 24,000 இறாத்தல் நிறையும் 12 அடி உயரமும் உடையதாக இருந்தது. அறிவுக்கூர்மை, ஞாபகசக்தி உடையது யானை. திடகாத்திரமான இளம் யானைகளுக்கு எதிரிகளே இல்லையெனக் கூறலாம். சிங்கம் யானையை எதிர்க்கக்கூடியது எனினும், அதனால், குட்டி யானைகள் மற்றும் பலமற்ற யானைகளையே எதிர்க்க முடியும்.

எனினும், இப்படிப்பட்ட யானைகள் மனிதரால் மட்டுமே அழிவை எதிர்நோக்கி வருவது கவலைக்குரிய விடயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினி ஐயங்கள்

## இன்டர்நெட் வேகம் குறைவு

**சீடி எம் ஏ (CDMA) தொலைபேசியூடாக 'இன்டர்நெட்' தொடர்பை ஏற்படுத்தும்போது, அதன் வேகமானது New Connection 114kbps என்று காட்டும். ஆனால், ஃபைல் (file) ஒன்றை 'டவுன்லோார்ட்' செய்யும்போது, அதன் வேகமானது 4-5kbps அளவிலேயே இருக்கும். இவ்வாறு வேகம் குறைவடைவதற்கான காரணம் என்ன?**






இன்டர்நெட்டுடன் தொடர்பை ஏற்பத்தும்போதுConnection Speed ஆக காட்டுவது அத் தொடர்பில் கிடைக்கப் பெறக்கூடிய அதி கூடிய வேகத்தை யேயாகும். ஆனாலும், 'சேர்வர்' கணினிகளில் உள்ள நெருக்கடி (Serverbusy) வலையமைப்பில் உள்ள இடநெருக்கடி (network busy), சமிக்ஞை கோளாறுகள் ஏற்படல் (Signal dropping ), தொடர்பாடல் இடையூறுகள் (Interference) ஆகிய காரணங்களின் காரணமாக, குறிப்பிட்ட அதிகூடுதலான வேகத்தை அடைய முடியாத நிலை ஏற்படுகின்றது. நமது நாட்டைப் பொறுத்தவரையில் சி டி எம் ஏ தொலைபேசியில் 20-30 khps என்ற அதிகூடிய அளவிலான வேகத்தையே பெற முடியும். ஆனால், அநேகமாக, செயற்பாட்டு ரீதியில் இதனையும் விட குறைந்த அளவிலான வேகத்தையே பெற முடிகின்றது.

## ஹார்ட் டிஸ்கில் சத்தம்...


**கணினியில் 'ஹார்ட் டிஸ்க்' நன்றாகத் தொழிற்படுகின்ற போதிலும் அதன் உட்புறத்தில் ஏதோ இடிபடுவதைப் போன்று ஒரு சத்தம் கேட்கின்றது. இதன்போது என்ன செய்வது?**



ஹார்ட் டிஸ்கின் உட்புறம் ஏற்படுகின்ற இயந்திரக் கோளாறு காரணமாக, இவ்வாறான சத்தங்கள் எழுவதுண்டு. இது தொடர்ச்சியாக இடம்பெற்றால் 'ஹார்ட் டிஸ்க்' ஆனது முழுமையாக செயலிழந்துவிடும். எனவே, இத்தகைய சந்தர்ப்பங்களில் முன் ஜாக்கிரதையாக முக்கியமான தரவுகளை அவசரமாக கொப்பி செய்துகொள்வது நல்லது. இதனையடுத்து திருத்துனர் ஒருவரை அழைத்து அதனை திருத்திக்கொள்ளவோ அல்லது புதிய ஹார்ட் டிஸ்க் ஒன்றைப் பொருத்திக்கொள்ளவோ வேண்டும்.

## விண்டோஸ் இன்ஸ்ட்டோல் செய்தல்

**'கணினிக்கு 'வின் டோஸ்' ஸை இன்ஸ்ட்டோல் செய்யும்போது ஹார்ட் டிஸ்க்கை ஃபோர்மட் செய்யும் கட்டத்தில் 'ஹார்ட்வெயர்' கோளாறு இருப்பதாக தகவலொன்று திரையில் தோன்றும். இதற்கான காரணம் என்ன?**






இதற்கு அநேகமாக ஹார்ட் டிஸ்க்கில் கோளாறு ஏற்பட்டிருக்கக்கூடும். அதன் உள்ளார்ந்த பகுதியில் கோளாறு ஏதும் ஏற்பட்டிருந்தால் இவ்வாறு நடைபெறுவதுண்டு. ஹார்ட் டிஸ்க்கை 'சேர்விஸ்'செய்வதன் மூலம் இந்தக் கோளாறினைத் திருத்திக்கொள்ள முடியாது.

அநேகமான சந்தர்ப்பங்களில் கணினியில் ரெம், மதர்போர்ட் அல்லது புரொஸஸர் ஆகியவற்றில் ஏதாவதொன்றில் கோளாறு ஏற்பட்டிருந்தால் இவ்வாறு நடைபெறுவதுண்டு. துளைகளால் முதலில் குறித்த ஹார்ட் டிஸ்க்கை இன்னொரு கணினியில் பொருத்தி 'ஃபோமெட்' செய்வதற்கு முயற்சிக்க வேண்டும். அப்போது எந்தப் பாகத்தில் கோளாறு உள்ளதென் பதை ஊகித்துக் கொள்ள முடியும். இதன் பின்னர் குறித்த பாகத்திற்குப் பதிலாக புதியதொரு பாகத்தைப் பொருத்தி மேற்படி கோளாறை நிவர்த்தி செய்ய முடியும்.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2011, மார்ச் மாதம் 23 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday March 23, 2011.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org